# பாதுகாவலன்

PATHUKAVALAN


**இவ்வாரவிநியோகம்**[3]

| | |
|---|---|
| மாதகல் | 202 |
| பண்டிவிரிச்சான் | 100 |
| மாம்புரி (புத்தளம்) | 79 |
| உயிலங்குளம் பங்கு | 65 |
| புங்குடுதீவு (மேற்கு) | 60 |
| தலைமன்னார் | 60 |
| மாத்தளைப்பங்கு | 60 |
| பண்டத்தரிப்பு | 50 |
| பதுளைப்பங்கு | 50 |
| நானாட்டான் | 50 |
| தாளையடிப் பங்கு | 47 |
| வவுனியா | 44 |
| அடம்பன் பங்கு | 40 |
| முருங்கன் பங்கு | 35 |
| செட்டிகுளம் | 35 |
| விடத்தல் தீவு | 35 |


மலர்: 115 இதழ் : 37 6-10-1989 (ஒக். 6 — ஒக். 13) ரூபா 1-50 — இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு



University of Jaffna, Sri Lanka RECEIVED 1989-10-17 Periodicals Division Library


## இறை வெளிப்பாட்டை நீங்கள் கற்று மக்களுக்குப் பகிர்ந்தளிக்கவேண்டும் - ஆயர்

## காலத்தின் அறிகுறிகளை நற்செய்தியின் ஒளியில் கண்டுணரவேண்டும் - அதிபர்

# கொழும்புத்துறை புனித சவேரியார்

# குருத்துவக் கல்லூரியின் 10-வது கல்வியாண்டு

**கல்லூரியின் மேன்மை அல்ல, கல்லூரியின் நோக்கம், காலத்தின் தேவைகளை குருமாணவர்கள் கண்டுணர்ந்து நற்செய்தியின் ஒளியில் பதில் கொடுக்கச் செய்வதும், தாம் போதிக்கும் மீட்பின் செய்தியை அறிந்து மனிதன், அவனது உலகம், மீட்பு ஆகியவற்றை நன்கு புரிந்து அழைப்பிற்கேற்ப சமய தலைவர்களாகுவதுமாகும் என அதிபர் தமது அறிக்கையில் தெளிவுபடுத்தினார்.**

யாழ். கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் பத்தாவது கல்வி ஆண்டு (1989–90) கடந்த 2–10–89 அன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ் ஆயர், குருக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்றிணைந்த கூட்டுத் திருப்பலியோடு ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆயர் தமது மறையுரையின் போது ''இறைவன் தம்மை யாருக்கு முழுமையாக வெளிப்படுத்த திருவுளம் கொண்டாரெனில் அவரைக்காண, அவர்மொழி கேட்க காலாதிகாலமாய் காத்திருந்த பெரும் இறைவாக்கினர்க்கன்று, மாறாக எளிமைத்தனமிக்க, படிப்பறிவற்ற அப்போஸ்தலர்களுக்கே. அன்று இறைவாக்கினர் ஆவலோடு எதிர்பார்த்திருந்த இறை வெளிப்பாடு, இன்று திருச்சபையின் கரங்களில் எமது கைக்கெட்டக் கூடியவாறு நிதர்சனமாக கிடைத்துள்ளது. ஆகவே குருமாணவர்களாகிய நீங்கள் அவற்றை ஆவலோடு கற்று மக்களுக்கு பகிர்ந்தளிக்கக் கூடிய ஆற்றலைப் பெற முயற்சிக்க வேண்டும்'' என்று அழைப்பு விடுத்தார்.

அதிபர் தமது அறிக்கையில் காலத்தின் அறிகுறிகளைக் கண்டுணர்ந்து நற்செய்தியின் விழுமியங்களை ஏற்றவாறு கடைப்பிடிக்கத்தக்க வருங்காலக்குருக்களை உருவாக்கும் அதி முக்கிய பணியில் குருத்துவக்கல்லூரி தொடர்ந்து இயங்கும் என்று கூறினார்.

மானிடத்தத்துவ இயலின் அடிப்படையில் அருட் தந்தை டோமினிக் யோசப் அவர்கள் வழங்கிய ''மனிதன் வெறும் செயற்பாடுகளின் தொகுதி தானா?'' என்ற ஆய்வுரை கல்வியாண்டின் முதற்பாடமாக அமைந்தது. கடந்த கல்வியாண்டின் பரீட்சைகளில் திறமையாகச் சித்தியடைந்தோர்க்கான பரிசில்கள் ஆயர் அவர்களால் வழங்கப்பட்டன.

இக்கல்வியாண்டை தகுதியாக ஆரம்பிக்கும் பொருட்டு வருடாந்த ஞானஒடுக்கத்தை இறையியல் மாணவர்களுக்கு அருட்திரு. டோமினிக் சாமிநாதன் அடிகளாரும், மெய்யியல் மாணவர்களுக்கு அருட்திரு. எஸ். யே. பிரான்சீஸ் அ.ம.தி. அடிகளாரும் நிகழ்த்தினர்.

இப்புதிய கல்வியாண்டிலே மன்னார், திருமலை மட்டுநகர், யாழ்ப்பாணம் ஆகிய மறைமாவட்டங்களிலிருந்தும், அமலமரித் தியாகிகள், திருவுளப் பணியாளர் ஆகிய சபைகளிலிருந்தும் மொத்தம் 19 புதிய மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்தனர்.

## குருக்கள் பணிபற்றிய வாக்கெடுப்பு

ஜப்பானில் 1900 குருக்களிடையே நடத்தப்பட்ட ஒரு வாக்கெடுப்பில், அடுத்த தலைமுறைகளுக்கும் வழங்கப்படக் கூடிய விசுவாச வாழ்வைக் கொண்டமக்கள் சமுதாயங்களைக் கட்டியெழுப்புவதற்குத் துணைபுரியக் குருக்கள் விரும்புகிறார்கள் என்பது தெரியவந்துள்ளது.

1988 இல் நடத்தப்பட்ட இவ்வாக்கெடுப்பைப் பற்றிய அறிக்கை தற்போது வெளிவந்துள்ளது. தாம் கட்டியெழுப்ப விரும்பும் பங்குகளில் இருக்கவேண்டிய அம்சங்களைப் பின்வருமாறு நிரைப்படுத்தியுள்ளனர்.

—உயிருள்ள விசுவாசமுள்ள இளைஞர்கள், இளந்தலைமுறையினருக்குச் செவிசாய்த்து அவர்களது மதிப்பீடுகளை மதிக்கக் கூடிய பெரியவர்கள்.

—விசுவாசத்தால் உருவாக்கப்பட்ட குடும்பம் பிள்ளைகளை விசுவாசத்தில் வளர்க்கக் கூடிய பெற்றோர்.

—தமது கிறிஸ்தவ அழைப்பை உணர்ந்த மக்கள்

—தமது விசுவாசத்தில் உறுதியாக நின்று அதற்கு முரணானவற்றை எதிர்த்து நிற்கக் கூடிய கத்தோலிக்கர்

—ஆலயத்துக்கு அடிக்கடி செல்லமுடியாவிட்டாலும் கிறிஸ்தவ விசுவாசத்தில் வாழும் மக்கள்

—தமது உற்றார் உறவினரிடையே விசுவாசத்தைப் பரப்ப முயலும் பங்குமக்கள்.

—பிள்ளைகளுக்கு மறைக்கல்வியூட்ட விரும்பும் கத்தோலிக்கர்.

இயக்கங்கள் சங்கங்களைப் பொறுத்தமட்டில் சமூகப்பாகுபாடு, வறுமை போன்ற நாட்டின் உடனடியான பிரச்சினைகளோடு தொடர்புள்ளவற்றையே குருக்கள் விரும்பினார்கள்.

வெகுசனத் தொடர்புச்சாதனங்களைத் தாம் பயன்படுத்த வேண்டுமென்றும் ஏற்கெனவே இருக்கும் தொண்டர் ஸ்தாபனங்களோடு ஒத்துழைத்து சமூக நீதிக்காக உழைக்கவேண்டுமென்றும் இக்குருக்கள் கருதுகின்றனர்.

## திருத்தந்தை பிறமதத் தலைவர்களைச் சந்திப்பார்

திருத்தந்தை அக்டோபர் 9-14 ஆம் திகதிகளில் இந்தோனேஷியாவுக்கு வருகை தரும்பொழுது பிறமதத்தலைவர்களையும் சந்திக்கவிருக்கிறார் என இந்தோனேஷிய சமய விவகார அமைச்சர் முனவீர் சியாட்சலி கூறியுள்ளார்.

முனவீர் "சுவர பெம்பருவான்" என்னும் புரொட்டஸ்தாந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பின்வரும் விபரங்களைத் தெரிவித்தார்.

திருத்தந்தையின் வருகைக்கான ஆயத்தங்கள் அரசினால் செய்யப்படுகின்றன. அவரது வருகை மதச்சார்பானதாக இருப்பினும், அவர் வத்திக்கானின் ஆட்சித்தலைவர் என்ற காரணத்தால் அவர் அரசின் விருந்தினராக இருப்பார். அவர் இந்தோனேஷியாவில் சுமாத்திரா, ஜாவா, புளோறஸ், திமோர் ஆகிய இடங்களைத் தரிசிப்பார்.

திருத்தந்தைக்கு முறையான வரவேற்பு அளிக்கப்படவேண்டுமென்றும், மதங்களுக்கிடையிலும், அரசுக்கும் பல்வேறு மதங்களுக்குமிடையிலும் நல்லுறவுகள் பேணப்படவேண்டியது அவசியமென்றும் முனவீர் முன்னரே கூறியிருக்கின்றார்.

22 - 10 - 89

மறை பரப்பு ஞாயிறு

அதனால்

13 - 10 - 89

பாதுகாவலன்

சிறப்பு அம்சங்களுடன் வெளிவரும்.

ஆ-ர்

## வேதாகம வங்கி கத்தோலிக்கருக்கு உதவும்.

கத்தோலிக்கர் வேதாகமத்தை விளங்கிக் கொள்ளவும் தீவிர புரொட்டஸ்தாந்து குழுக்களின் பிரசாரத்தை எதிர்த்துநிற்கவும் வேதாகம வங்கி துணைபுரியுமென பிலிப்பைன் பேராயர் அல்பேட்டோ பியமொண்டி கூறியுள்ளார். இவ்வங்கிக்கு மக்கள் வேதாகமங்களையோ பணத்தையோ கொடுக்கலாம். வங்கி இலோயிலோவிலுள்ள வறிய மக்களுக்கு வேதாகமங்களை விநியோகிக்கும்.

மறைக்கல்வி கற்பிக்கும் போது வேத வசனங்களைப் பயன்படுத்தும்படி பேராயர் மறையாசிரியர்களுக்கு அறிவுரை கூறுகிறார். குருக்கள் பற்றாக்குறை காரணமாக மக்களுக்கு வேதாகம அறிவை ஊட்டுவதற்கு திறமையுள்ள மறையாசிரியர் வேண்டும் என அவர் குறிப்பிட்டார். தற்போதுள்ள விகிதம் ஒரு குருவுக்கு 35000 மக்கள்.

தீவிர புரோட்டஸ்தாந்து குழுக்கள் இறைவார்த்தையைத் திரித்து, கத்தோலிக்க திருச்சபையைத் தாக்குகின்றன என்றும், வேதாகம அறிவு


(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)


**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்கருத்து

### திருச்செபமாலை

பெயர்போன உளவியலாளர் அட்றியான் வான்காம் (Adrian van kaam) பலர் செபமாலையை விரும்பிச் சொல்லுகிறார்கள். இது இவர்களை இறைவனை நோக்கி இட்டுச் செல்லும் சாதனமாக உள்ளது என்கிறார்.

செபமாலை நீண்ட காலமாக திருச்சபையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு செபமுறையாக உள்ளது.

செபமாலை எவ்வேளையிலும் செபிக்கக்கூடியது. எந்த கருத்திற்காகவும் மன்றாடக் கூடியது.

தனியாக செபிக்கவும், குழுவாக இருந்து பொதுவாக செபிக்கவும் பயன்படுத்தக்கூடியது.

எந்த வயதிற்கும் பக்குவத்திற்கும் ஏற்ற வண்ணம் தியானிக்கப்படக் கூடியது. யாரும் செபிக்கக் கூடியது.

வேதாகம சம்பவங்களை எமக்கு நினைவூட்டி இயேசுவின் வாழ்க்கை வரலாற்றை சிந்திக்க அழைப்பது. சங்கீதங்களைப் போலவும், பஜனையைப் போலவும், மீளவும் மீளவும் செபித்து பயன்படக் கூடியது.

சிலர் ஒரே சிந்தனையை மீளவும் சிந்திக்க முடிவதில்லை என்று கூறுகின்றனர். ஒரே சிந்தனையை மீளவும், மீளவும் சிந்தித்துக் கொள்வதல்ல; அதில் ஒன்றுவதுதான் செபமாலை. இது ஒரு ஞான அனுபவத்தின் பகுதி.

ஒரே வசனங்களை மீண்டும், மீண்டும் சொல்கிறோம் என்று சிலர் முறையிடுவார்கள். கீழைத்தேச செபமுறைகளைப் போல் பஜனையை மீளவும் மீளவும் படிப்பதால் ஏற்படுகின்ற மன அமைதியையும், செபிக்கும் மன பக்குவத்தையும் இது தரவேண்டும். திரும்ப திரும்ப சொல்லுவதால் சொற்களையே செபமாக்குகின்ற, சொற்களையே மறந்து இறையோடு ஒன்றிக்கின்ற அனுபவத்தை தரவேண்டும்.

செபமாலையில் தேவ அன்னையின் புகழ்தான் ஓங்குகின்றது. எப்போதும் மாதாவைப் பற்றியே செபிக்கிறோம் என்று கூறப்படுவதுண்டு. இதில் தேவ அன்னையைப் பற்றி சொல்லி இயேசுவையே புகழ்கிறோம். இயேசுவின் வாழ்க்கை வரலாற்றை நினைத்து செபிக்கிறோம்.

சில பங்குகளில் செபமாலைப் பக்தி நன்கு வளர்க்கப்படுகிறது. பத்து பத்து குடும்பங்கள் ஒன்று சேர்ந்து சில பங்குகளில் செபமாலை சொல்கிறார்கள்.

மாலை வேளைகளில் எல்லோரும் ஆலயத்திற்கு வந்து செபமாலை சொல்லி செபிப்பதற்கு சில பங்குகளில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மரியாயின் சேனை, மாதா கூட்டம், திருக்குடும்ப சபை போன்ற பக்திச் சபைகள் மூலமாக பங்கின் எல்லா வீடுகளிலும் பகுதி பகுதியாக சென்று செபமாலை சொல்லப்படுகிறது.

செபமாலைப் பேரணிகள் பங்கு ரீதியாகவும், பங்குகளுக்கிடையிலும் சொல்ல ஒழுங்குகள் சிறப்பாக நடைபெறுகிறது.

பங்கின் குடும்பங்களிலேயே சிறப்பாக குடும்பமாக அமர்ந்து செபமாலை சொல்ல உற்சாகம் மூட்டப்படுகிறது.

இவை எல்லாம் வரவேற்கப்பட வேண்டிய பங்குகளின் நடைமுறைகள். இவை மட்டுமல்ல இன்னும் பல புதிய செபமாலை சொல்லும் முறைகள் கண்டு பிடிக்கப்பட வேண்டும். செபமாலைக் கருத்தரங்குகள், செபமாலை விளக்க வகுப்புகள், செபமாலைக் கண்காட்சிகள், செபமாலைச் சரித்திரம் பற்றிய விளக்கங்கள், செபமாலை பற்றிய திருச்சபைப் போதனைகள், எழுத்துக்கள் பற்றிய விளக்கங்கள் என்பன எல்லாம் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

செபமாலை வேதாகமத்தின் ஒரு விளக்கப் பகுதி, யேசுவின் வாழ்க்கை வரலாற்றை சிந்திக்க வைக்கும் சாதனம், செபிப்பதற்குத் தேவையான மனநிலையை உருவாக்கும் கருவி, கீழைத்தேச முறையில் செபிப்பதற்கு பாவிக்கப்படும் சங்கீதங்கள், பஜனைகள் போன்ற ஒரு செபமுறை, செபிக்க வரும் எல்லோரையும் ஒன்று சேர்க்கும் ஒரு செபம் என்பவற்றை எல்லாம் இறை மக்களுக்கு விளங்க வைக்கவும், விளக்கவும் இம்மாதம் பயன்படுவதாக!

## தேனருவி

### ஆண்டின் 27-ம் ஞாயிறு (8-10-89)

### கடுகளவு என்றாலே....

தர்மராஜ் ஒரு தெய்வ பக்தன், கடவுளுக்கு என்றால் அள்ளிக் கொடுப்பார். உபவாசமிருப்பார். ஆலயத் திருவிழாவை முன்னின்று நடாத்துவார். அவருடைய செல்வமும் பெருகியது. நிலமும் நன்றாய் விளைந்தது. இவை அனைத்தும் ஆண்டவரின் அநுக்கிரகத்தால் பெற்ற பயன் என்றும், தனக்கு இறைவன் மீதுள்ள விசுவாசத்தின் விளைவு என்றும் பெருமிதம் அடைவார்.

அவருடைய ஊரிலுள்ள தங்கமணிக்கு வருவாய் அதிகமின்மையால் கோவிலுக்குக் கொடுப்பதுமில்லை, அதனால் ஆண்டவனை அவ்வளவு அணுகுவதுமில்லை. தனது பக்தியை உதாரணம் காட்டி தர்மராஜ் இந்தத் தங்கமணிக்கு அறிவுரையும் கூறியிருக்கிறார். இதுஇப்படி இருக்க, தங்கமணியின்நிலம் இப்போநன்கு விளைந்தது, பின்பு போட்ட முதலீடும் பலனுக்குமேல்பலனும்கொடுத்தது. இதைப் பார்த்த தர்மராஜ் பூகம்பமாகிறார். தெய்வம் தொழாத தங்கமணி தன்னை விட மிஞ்சிவிட்டார் என்பதால் செழுமையும், வளமையும் ஆண்டவனின் கொடையல்ல; அவை விசுவாசத்தினதும் விளைவல்ல என்று சொல்லி இறைவனை மறுக்கின்றார் தர்மராஜ். இப்போது, தங்கமணி ஆண்டவனை இன்னும் அணுகிவர; தர்மராஜ் இன்னும் தூரத்தே சென்று தெய்வத்தை நிந்திக்கின்றார். அகந்தையில் அழிந்து கொண்டிருந்த தன் வாழ்வில் இழந்த தெய்வத்தை தர்மராஜ் மீண்டும் கண்டுகொண்டார்.

இறைவனை முற்றாக மறந்து போகும் மனிதர் பலர் உண்டு. விசுவாசம்சோதிக்கப்படுகிறது. ஏமாற்றத்திலும், எதிர்ப்பிலும் நீதிமான் விசுவாசம் தளர்ந்து போகான். அபாக்கூக் என்னும் இறைவாக்கினர் மக்கள் மத்தியில் வளர்ந்த அக்கிரமத்தையும், கொடுமையையும் சகிக்க முடியாமல் மக்களை அழிக்கும்படிகேட்கிறார். நீதிமான்களைக் காக்கவேண்டும் என்கிறார். ஆனால் நீதிமான் தன் விசுவாசத்தை எக்கட்டத்திலும் அழிக்க மாட்டான் என்கிறார் இறைவன்.

நற்செய்தியிலும் அப்போஸ்தலர்கள் தம் விசுவாசத்தை அதிகமாக்கும்படி கேட்கிறார்கள். ஏனென்றால் இயேசுவைப் போன்று தாமும் பல புதுமைகள் செய்யலாம் என்ற எண்ணம். ஆனால் கிறீஸ்து கூறும் அறிவுரை என்ன? விசுவாசம் உள்ளவர் தாம் பக்தர்கள், நீதிமான்கள், வெற்றியீட்டினோம் என்று தம்மை புகழ்வதற்கு ஒன்றுமில்லை. மாறாக விசுவாசம் இறைவனுக்குத் தம்மை அர்ப்பணம் செய்தவராக; அன்பிற்கு அடிமையாகத் தம்மைக் கருதுவதே.

புனித சின்னப்பரும் எபேசின் ஆயரான திமோத்தேயுவுக்கு எழுதுகிறார். எந்நேரமும் அவர் பெற்ற விசுவாசத்தைக்காத்து வாழ்வால் சான்று பகரும்படி நினைவூட்டுகிறார்.

இன்று அருட் சாதனங்களுக்கும், ஆலய விழாக்களுக்கும், வழிபாடுகளுக்கும் குறையில்லாமல் இருக்கிறோம். ஒவ்வொரு கிராமத்திலும் பெரும்பாலும் இரண்டிற்குக் குறையாத கோவில்கள். ஆனால் எம் விசுவாசம் வளருகின்றதா அன்றேல் அருகிப்போகின்றதா? சமூக அந்தஸ்துப் போய்விட்டால் தெய்வத்தையும் மறந்துவிடுவோம். பங்குக் குரு என் கோரிக்கையை மறுத்துவிட்டால் கோவிலையே மறந்துவிடுவோம். என்னைக் கண்காணிக்க யாருமில்லையென்றால் அருட்சாதனங்களைக் கைவிட்டுவிடுவோம். பணமும், பதவியும் கிடைக்குமென்றால் சமயத்தை மாற்றிக்கொள்வோம்.

கடுகளவு விசுவாசம் எனக்கு இருந்தால் என் வாழ்வு...

சுவாமி. ஜீவா போல் அ,ம.தி.

அபாக். 1:2-3; 2:2-4 நீதிமான் விசுவாசத்தினால் வாழ்வான்.
திமோ. 1:6-14 சாட்சியம் கூற வெட்கப்படாதேயும்.
லூக். 17:5-10 உங்களுக்கு விசுவாசம் இருந்தால்......

## கலைநிலா

### திருமறைக் கலா மன்றம் அளிக்கவிருக்கும் "நீ எந்தன் பாறை" (நாட்டுக்கூத்து)

கடந்த 10-9-89 ம் திகதி மாலை 5 மணிக்கு பொதுச் செயலாளர் V. J. கொன்ஸன்ரைன் தலைமையில் "நீ எந்தன் பாறை" நாட்டுக் கூத்து நடிகர் பாத்திரம் வழங்கும் வைபவம் மறைக்கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. மறை மாவட்ட செயலாளர் அருள் திரு. செல்வராசா அடிகள் குத்து விளக்கேற்றி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நாட்டுக் கூத்து இயக்குனர் திரு. S. பாலதாஸ் அவர்கள் "நீ எந்தன் பாறை" நாட்டுக் கூத்து வரலாறு பற்றி சொற்பொழிவாற்றியும் நடிகர்பாத்திரங்களின் தன்மை பற்றியும் குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினர் பேசுகையில் திருமறைக் கலாமன்றம் இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் தனது கலைப்பணியை தொடர்ந்து நடாத்தி வருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது என்றும், இவ்வாறான சமய சம்பந்தமான வரலாற்று நிகழ்ச்சிகளை நாட்டுக் கூத்து வடிவில் மக்களுக்கு அளிப்பதையிட்டுத் தாம் பெருமைப்படுவதாகக் கூறி நடிகர்களுக்கு நடிகர் பாத்திரங்களை வழங்கினார்.

நிகழ்ச்சியின் இறுதியில் செயலாளர் திரு. நெல்சன் அவர்களின் நன்றியுரைக்குப்பின் நாட்டுக்கூத்து மரபின்படி பக்கவாத்தியத்துடன் முதல் ஒத்திகை நடை பெற்று வைபவ நிகழ்ச்சி முடிவடைந்தது.

தகவல்: N. மெலானி

★ ★ ★

### எழுத்தாளர்களின் கவனத்திற்கு

1989 மார்கழி திருமறைக்கலாமன்றத்தால் வெளியிடப்படவிருக்கும் "கிறிஸ்மஸ் மலர்" க்கு தரமான ஆக்கங்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே எழுத்தாளர்கள் வருகிற 31-10-89 க்கு முதல் இவைகளை வெளியீட்டுப் பகுதிக்கு அனுப்பிவைக்கும் வண்ணம்கேட்டுக்கொள்கின்றோம்.

"வெளியீட்டுப் பகுதி"
திருமறைக்கலாமன்றம்
223, பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

வீட்டுக்கொரு பாதுகாவலன் உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 4. புளிக்காரத்தின் பூகம்பம்.

மூடியப்பர்.
திருத்தொண்டருள் துடியானவர்.
வீரமும் விவேகமும் அவரது படைக்கலங்கள்.
சொற்களும் கருத்துக்களும் அவருக்குச்
சேவகம் புரிந்தன.
விசுவாசம் பற்றிய விவாதமென்றுல்
அவருக்கு விருந்துண்பது போல.
விளைவு......
யூதருக்கும் குருக்களுக்கும் அவர் வேப்பங்காய்.

ஒரு நாள்......
வேங்கைக்கு சில வெள்ளாடுகள் சவால் விட்டன.
சமர் புரிய வாவென்று சத்தம் போட்டன.
அலெக்சாந்திரியர் சிலரும்,
சிலிசியா, ஆசியா நாட்டினர் சிலரும்
முடியப்பரோடு தர்க்கிக்க வந்தனர்.

விவாதம் பெரிதாய் நீடிக்கவில்லை.
சூரியன் முன் விளக்குக்கூட்டம் ஒளிசிந்த முடியுமா?
பூரணை நாளில்,
வானில்,
நட்சத்திரங்களுக்குத்தான் இடமேது?
தோற்ற வெள்ளாடுகள் சுயஉருக்கொண்டன.
குள்ளநரிகளாய் அடையாளம் தந்தன.
சதியென்ற கயிறும்,
பொய்சாட்சி நூலும் கொண்டு
அவை
வஞ்சக வலையொன்று பின்னின.
"இவன் கடவுளுக்கும் மோயீசனுக்கும் எதிராகப்
பழிச்சொல் கூறக்கேட்டோம்."
"நசரேத்தூர் இயேசு இவ்விடத்தை அழித்துவிடுவார்.
மோயீசன் காட்டிய முறைமைகளை மாற்றிவிடுவார்.
என்றெல்லாம் கூட கூறக்கேட்டோம்."
குள்ளநரிகள் இப்படிக் கூக்குரலிட்டு
மறைநூல் அறிஞரையும், மூப்பரையும் சாட்சி வைத்து
தலைமைச் சங்கத்தையும் கூட்டிவிட்டன.

சிறையிலும் சிங்கத்தின் சுயம் போகுமோ?
அது கர்ச்சித்தது.

நீண்ட உரை.
வரலாற்றில் யூதரின் துரோகம்
யூதர்களுக்கே உரித்துக் காட்டப்பட்டது.
ஈற்றில் அது இப்படி முடிந்தது:
"திமிர் பிடித்தவர்களே!
விருத்த சேதனமில்லா உள்ளமும் செவியும் படைத்தவர்களே!
பரிசுத்த ஆவியை நீங்கள் எப்போதும் எதிர்க்கிறீர்கள்.
முன்னோருக்கேற்ற மக்கள் நீங்கள்.
அவர்கள்,
இறைவாக்கினரைத் துன்புறுத்தி கொலை செய்தனர்.
நீங்களோ,
நீதிமானையே காட்டிக்கொடுத்து கொலையும் செய்தீர்கள்.
திருச்சட்டத்தைப் பெற்றிருந்தும் பின்பற்றவில்லை"

கூட்டம் கோபங்கொண்டது.
பற்களை நறநறத்தது.

நெருப்பில் நெய்யாய் முடியப்பர் கூறினர்,
"வானம் திறந்திருக்க மனுமகனைக் காணுகிறேன்"

அவர்களோவெனில்......
ஒன்றாக எழுந்தனர்.
அவர்மேல் பாய்ந்தனர்.
நகருக்கு வெளியே தள்ளிச் சென்று,
கல்லால் எறிந்தனர்.

கொன்று போட்டனர்.

சிறுகதையொன்றின் முடிவு
தொடர்கதையின் தொடக்கமானது.

யெருசலேமில்,
திருச்சபையை எதிர்த்து பெருங்கலாபனை தோன்றியது.
கிறிஸ்தவர்கள்
வீடுவீடாய் வேட்டையாடப்பட்டனர்.
விளைவு......
அப்போஸ்தலர் தவிர அனைவரும் சிதறுண்டு
நாட்டுப்புறங்களுக்கு ஓடிப்போயினர்.

நெற்று வெடித்து சிதறிவிட்டது.
இனி விதை விழுந்த இடமெல்லாம் மரம்தானே!
சிதறிய சீடர்கள்
சென்ற இடமெல்லாம் போதித்தனர்.
புளிக்காரத்தின் பூகம்பம்
சுற்றுப்புறமெங்கும் சூடேற்றியது.
விளைவு......
விலக்கப்பட்ட கற்கள்
முக்கியத்துவம் பெறலாயின......

— சந்திரன்

# பொதுநிலைப் பிரான்சிஸ்கன் சபை-யாழ்ப்பாணம்

முன்னுள் யாழ் ஆயர் மேதகு J. A. கியோமார் ஆண்டகையின் ஏவுதலின் பேரில் யாழ் நகரிலே ஐம்பது வருடங்களுக்குமேல் தேவ திருத்தொண்டாற்றி சிறுவர், சிறுமியர், வாலிபர், கன்னியர், முதியோர் ஆகியோருக்குப் பத்திக் கூட்டங்களையும் புனிதர் வின்சென்ற் டிபோல் சபை, தரும சீமாட்டிகள் சபை, ஆகியவற்றையும் ஆரம்பித்து வழி நடாத்தியவராகிய அமலோற்பவ மரியநாயகி சபைத்துறவி வண இயூஜின் குருசோ அவர்களால் யாழ் நகரிலே பொது நிலைப் பிரான்சீஸ்கன் சபை ஆரம்பிக்கப்பட்டது.

1934 ஆம் ஆண்டு நத்தார்த் தினமாகிய மார்கழி 25ந் திகதி மாலை புனிதர் சூசையப்பர் கூட்டத்தைச் சேர்ந்த நான்கு வாலிபர்களை வண. விறதர் குருசோ அவர்கள் அழைத்துச் சென்று ஒரு கூட்டத்தை நடாத்தினர். அந்த வாலிபர்களை நோக்கி அவர் கூறியது. "பிள்ளைகளே! உங்கள் வாழ்க்கையிலே திருமறைப் புண்ணிய வழியில் நீங்கள் மேம்படவும், எமது பங்கு மக்கள் மத்தியிலே திருமறைச் சேவைகள் புரியவுப ஒரு சபையை ஆரம்பிக்க விரும்புகிறேன். அச்சபையிற் சேர்ந்து தொண்டாற்ற உங்கள் அனுமதியைக் கோருகிறேன்" என்றுர். அவ்வாலிபர்கள் விறதர் அவர்களின் விருப்பைப் பூரண மனதுடன் ஏற்றுக்கொண்டனர். அதன் பின்னர் வாரந்தோறும் கூட்டம் நடைபெற்றது. அவர்களின் வாழ்க்கைக்கும் சேவையாற்றலுக்கும்வேண்டிய வழி வகைகள் பயிற்றப்பட்டன. சிலவாரங்களின் பின்னர் வண- விறதர் வந்தனைக்குரிய ஆயர் அவர்களிடம் சென்று இக்கூட்டம்பற்றி விபரித்து அவரின் அனுமதியைக் கோரினர். அதற்கு ஆயர் அவர்கள் யாழ்நகரில் இப்படியொரு புதிய சபையை ஆரம்பிப்பதிலும் பார்க்க உலகம் முழுவதும் பரந்துவிளங்கும் பொதுநிலைப் பிரான்சீஸ்கன்சபையை இங்கே ஆரம்பித்து நடாத்துதல் நன்று. அதிற்சேரும் மக்கள் தங்கள் புண்ணிய வாழ்க்கையைச் சீர்ப்படுத்துவதோடு ஏனையோருக்குத் தொண்டாற்றவும் உதவுவர் என்றுர். ஆயரின் ஏவுதலை விறதர் குருசோ அவர்கள் ஏற்றுக்கொண்டு இச்சபையை ஆரம்பித்து நடத்துதல் நன்று. அதிற்சேரும் மக்கள் தங்கள் புண்ணிய வாழ்க்கையைச் சீர்படுத்துவதோடு ஏனையோருக்குத் தொண்டாற்றவும் உதவுவர் என்றுர் ஆயரின் ஏவுதலை விறதர் குருசோ அவர்கள் ஏற்றுக்கொண்டு இச்சபையை ஆரம்பித்தார். இந்தியாவிலிருந்து சபையின் ஒழுங்கு புத்தகங்களை வரவழைத்து வாலிபர்களுக்குப் பரிமாறியதோடு வாரந்தோறும் அவர்களைக் கூட்டிச் சபைச்சட்டங்களையும் வாழ்க்கை ஒழுங்குகளையும் விளக்கி ஆயத்த பயிற்சியைச் செய்துவந்தார்.

யாழ் பேராலயப் பங்குத் தந்தையாயிருந்த காலஞ்சென்ற வண. குரவர் எஸ். ஜி. அவர்கள் ஞானத்தலைவரா யிருக்கும் உத்தரவை ஆயர் அவர்கள் வழங்கி அதற்கான சபை அனுமதியைப் பெறும்படி பணித்தார். எனவே இந்தியாவின் அக்ரா மறைமாவட்டத்திலுள்ள புனிதர் பிரான்சீஸ்கு சபைக்கு விண்ணப்பித்தபோது, அதன் தலைவராயிருந்த அதிவண. குரவர் அயசிந்த் O. M. Cap. அவர்களால் 1985-ம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 28—ம் நாள் சபையின் அங்கீகாரமும், ஞானத் தலைவரின் நியமனமும் அடங்கிய உத்தரவுப்பத்திரம் அனுப்பப்பட்டது. அதன்பின்னர் 1935ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் நான்காம்நாள் புனிதர் பிரான்சீஸ்கன் சபை முறைமையாக ஆரம்பமாயிற்று. எட்டு அங்கத்தினர் சபை உடையைப் பெற்று ஆயத்த அந்தஸ்தை ஆரம்பித்தனர். அதன்பின்னர் இச்சபையிலே பல பங்கு மக்கள் சேர்ந்து வந்தார்கள். 1936ம் ஆண்டு ஐப்பசி மாதம் புனிதர் பிரான்சீஸ்குவின் திருநாளன்று ஏழு பேர் வாக்குத்தத்தம் செய்து நிரந்தர அங்கத்தினராயினர். ஆண்டுதோறும் சபையானது மென்மேலும் வளர்ந்துவரலாயிற்று.

ஞானத் தலைவர்கள்

வண, குரவர் இல்லறி அவர்களுக்குப் பின்னர் ஞானத்தலைவர்களாக வண. குரவர்கள் என். யோசவ், யோண்மேரி கூச்சனன், ஏ. ஈ. அல்விறெட் ஆகியோர் பணியாற்றினர். தற்போது வண. குரவர் ஜே. பி. ஈ. செல்வராசா, அடிகள் ஞானத்தலைவராக இருந்து பணிபுரிகின்றார்.

சபைத் தலைவர்கள்

இச்சபையின் ஆரம்பத்திலே அங்கத்தவர்களாகச்சேர்ந்தவர்களில் சகோதரன் அ. பி. முத்தையா, சகோதரர் ச. பிரான்சீஸ் ஒவ் மேரி ஆகிய இருவரும் 47 வருடங்களாகச் சபையின் தலைவர்களாகப் பணிபுரிந்துள்ளனர். இவர்கள் இருவரும் ஐம்பது வருடங்களாகச்சபையின் அங்கத்தவர்களாக இருந்து வருவது இறைவன் அருளாகும். எனவே அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். தற்போது சகோதரர் சா. அந்தோனிப்பிள்ளை அவர்கள் ஆறு வருடங்களாகத் தலைவர் பதவி வகித்துச் சேவையாற்றி வருகின்றுர்.

இச்சபையின் ஆரம்பத்திலே ஆண்கள் மட்டுமே சபையிற் சேர்ந்திருந்தார்கள். பன்னிரு வருடங்களின்பின்னர் 1947 ம் ஆண்டு பெண்களும் சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். யாழ் நகரத்தைவிட வேறு பல இடங்களிலுள்ள பங்கு மக்களும் பிரதானமாக மிருசுவில், கரம்பன், இளவாலை, பருத்தித்துறை, கோப்பாய் சுண்ணுகம் ஆகிய இடங்களில் உள்ளோர் பலரும் இச்சபையிலே சேர்ந்துள்ளனர்.

கிளைச்சபைகள்

சில வருடங்களின் பின்னர் கரம்பன், இளவாலை, மிருசுவில் ஆகிய மூன்று இடங்களிலும் கிளைச்சபைகள் ஏற்படுத்தப்பட்டன. பலவருடங்களாக இக்கிளைச்சபைகள் நடைபெற்று வந்தனவாயினும் தற்போது கரம்பனில் மாத்திரமே கிளைச்சபை நடைபெற்று வருகின்றது.

முடிவுரை

ஐம்பது வருடங்களுக்கு மேலாக யாழ் நகரிலே பொதுநிலைப்பிரான்சீஸ்கன் சபையானது நடந்தேறி வருவதற்கு அருள் பொழிந்துவரும் இறைவனுக்கு நாம் நன்றியறிந்த தோத்திரம் புரிவதோடு மேலும் எமக்கு ஆசியளித்து எமது சபையைப்பாதுகாத்து வழிநடத்தஇறைவனை வேண்டுவோமாக. எமது சபையின் பிதாவாகிய புனிதர் பிரான்சீஸ் அவர்களுக்கும் அவர் அளித்துவரும் சலுகைகளுக்காக நன்றி செலுத்துவோமாக.

அ. பி. முத்தையா
உபதலைவர்
பிரான்சிஸ்கன்சபை

# முருங்கன் பங்கில் பிரிவுபசார வைபவம்

முருங்கன் பங்கில் நான்கு வருடகாலமாக பணிபுரிந்து உயர்படிப்பிற்காக ரோமாபுரி செல்கின்ற அருள்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளாருக்கு சென்றமாதம் 20-ம் திகதி பங்குமக்களால் பிரிவுபசார வைபவம் நடாத்தப்பட்டது. இவர் பங்கிலே பணிபுரிந்த காலத்தில் ஆன்மீகரீதியாகவும் பங்கின் முன்னேற்றத்திற்காகவும் பல சேவைகளைப புரிந்தார் என இவ்வைபவத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றிய பங்குச்சபை உபதலைவர் தரு. செல்வம் தெரிவித்தார். இன்னும் பலர் இவரின் சேவையைப் பாராட்டி உரைநிகழ்த்தினுர்கள்.

இவ்வைபவத்தில் கலந்துகொண்டு மெதடிஸ்தசபை போதகர் அருள்திரு. D. அழகராஜா உரையாற்றுகையில் இக்குருவானவர் இப்பங்கில் இருந்தகாலத்தில் இரண்டு சபைகளுக்கும் இடையில் நல்லுறவை வளர்ப்பதற்கும் பொது நிகழ்ச்சிகளைச் சேர்ந்து நடாத்துவதற்கும் முன்நின்று உழைத்தார் எனவும் இவரின் பிரிவு எமக்கும் கவலையைத்தருவதா

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)



எடுப்போம் போர்க்கருவி
செபமாலை!
தொடுப்போம் புனித போர்!
காப்போம்
எம் தாய் நாட்டை!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளங்கள் உருகும்போது

சிறுகதை

அன்றிரவு எனக்குத் தூக்கம் வரவில்லை. காரணம், அந்தக் கல்லூரியில், கடந்த மூன்று வருடங்களாகச் சேவை செய்து நாளையுடன் கொழும்புக்கு மாற்றலாகிச் செல்ல இருந்தது தான். சீமெந்துத் தொழிற்சாலையில் உள்ள ஒரு காரியாலயத்தில் வேலை செய்த என்கணவர், பதவி உயர்வு பெற்று, அங்கு செல்வதால் ஏற்பட்ட இடமாற்றம்.

நான் அந்தப் பெண்கள் கல்லூரியில்பாடம் எடுத்தஏழு வகுப்புக்களையும் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து கற்பித்து வந்தேன். பொதுவாகக் கல்லூரிகளில், பாடங்களை எடுக்கும் ஆசிரியர்கள் வருடா வருடம் அதே பிள்ளைகளோடு, சேர்ந்து அடுத்த வகுப்புகளுக்குத் தொடர்ந்து செல்வது வழக்கம். குறிப்பாக விடுமுறைக் காலங்களிலும் கஷ்டப்பட்டு, மேலதிக வகுப்புக்களையும் வைத்துக் கற்பிக்கும் ஆசிரியைகள், இம்முறையை நன்கு வரவேற்றிருந்தனர் கடந்த மூன்று வருடங்களும் அந்த மாணவிகளின் பேச்சுக்கள், கேலிகள், குறும்புகள், என்பனவற்றை எண்ணிப்பார்க்கின்றேன். முதன் முதலாக அங்கே நான் மாற்றலாகிச் சென்றேன். முதற்பாடம் எட்டாம் ஆண்டு வகுப்புகளில் ஒன்ருக இருந்தது. பிள்ளைகள் "அசெம்பிளி" காரணமாகப் பிந்தி வர நேர்ந்தது. அதற்கு முன் நான் நேர அட்டவணையையும் கொண்டு வகுப்பில் சென்று உட்கார்ந்தேன். மாணவிகள் வந்தவுடன் பாடத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஆவலினுல் லாச்சியைத் திறந்தேன் "சோக்" ஒன்றை எடுப்பதற்கு, அங்கே ஒரு பாம்பு. பயத்தால் ஓடிய போது ஒரு முழங்காலில் நோவரக் கூடியதாக விழுந்தேன். அவ்விடம் வந்த காரியாலய உதவிப் பையனேடு பாம்பை அடிக்க முற்பட்டேன். ஆனுல் அது ஒரு றபர்ப் பாம்பாக இருந்தது. அதை எடுத்து என் கைப்பையில் வைத்துக் கொண்டேன். மாணவிகள் வந்த பின்னர் தான், நான் வருவேன் என்ற எதிர்பார்ப்போடுதான் இது நடந்திருக்க வேண்டும் என ஊகித்தேன். பிள்ளைகள் வந்த போது எந்த வித முகபாவமாற்றங்களையும் காட்டாது பாடங்களை ஆரம்பித்தேன். யார் இந்த றபர்ப்பாம்பை வைத்ததென்று கேட்கவும் இல்லை அத்துடன் அதிபரிடம் 'கொம்பிளேன், பண்ணவுமில்லை.

ஒரு நாள் இடைவேளை மணியடித்தது. பிள்ளைகள் எல்லாரும் வெளியே சென்று விட்டனர். வழமைபோலப் பிளாஸ்க்கை எடுத்து, மூடியில் தேநீரை ஊற்றினேன். அதற்குள் ஒரு மட்டத்தேள் கிடந்தது. சந்தேகத்தின் பேரில் ஒரு தடியை எடுத்துத் தட்டிப் பார்த்தேன். அது ஒரு பிளாஸ்ரிக் மட்டத்தேளாக இருந்தது. அதை எடுத்துத் துடைத்த பின்னர், கைப்பையுக்குள் வைத்துக் கொண்டேன். வகுப்பில் இருந்த கலண்டரைப் பார்த்த போது அது ஏப்பிரல் முதலாம் திகதியாக இருந்தது. ஒன்றும் நடக்காதது போல அவ்வகுப்பிலேயே இருந்தேன். அன்று அவ்வகுப்பிற்கு எனது பாடம் "டபிள்பீரியட்டாக" இருந்தது.

ஒரு நாள் பாடசாலை பகிஷ்கரிப்பு பிள்ளைகள் எவரும் வரவில்லை. ஆசிரியர்கள் மட்டும் தான். பிள்ளைகளின் 'பாத்றூமிற்குச்" சென்றேன். அங்கே சுவரில் என் பெயர் எழுதப்பட்டு அருகே நதியா என்று எழுதப்பட்டிருந்தது. தண்ணீரில் நனைக்கப்பட்ட சோக்கினுல் எழுதப்பட்டிருந்ததால் "பைப்" தண்ணீரைத் தொட்டு அதனை அழித்தேன். அது என்பட்டப்பெயர்......?

பாடசாலைகளில் ஆசிரியர்களுக்குப் பிள்ளைகள் பட்டப் பெயர் சூட்டுவது வழக்கம். நான் முன்னர் படிப்பித்த பாடசாலையில், ஓர் ஆசிரியர் சற்று அகலமான காற்சட்டைகளை அணிவார். அவருக்குப் 'பாவாடை' என்று பட்டம் வைத்திருந்தனர். சற்று வயதில் முதர்ந்த ரீச்சருக்கு 'மந்திரக் கிழவி, சற்று மாறுபட்ட நிலையில் நடந்து செல்லும் இயல்பையுடைய கணித ஆசிரியருக்கு 'டிஸ்கோ', அதே பாடசாலையில் முதல் நாள் நான் ஒரு வகுப்பில் எடுத்த முதற் பாடம் "கொம்பியூட்டர்" பற்றியதாகும். அடுத்த நாள் அதே வகுப்பிற்குச் சென்று கொண்டிருந்த போது ஒரு பையன் "எடே வாருவடா 'கொம்பியூட்டர்' என்று கூறியது. எனக்குக் கேட்டது. அதை நான் கேட்டும் கேளாதது போல, அதே வகுப்பிற்குள் சென்றேன்

✻✻✻✻✻✻✻✻✻✻✻

(வே. சாமுவேல்)
யூனியன் கல்லூரி
தெல்லிப்பளை

✻✻✻✻✻✻✻✻✻✻✻

காலை எழுந்ததும் பாடசாலைக்கு ஆயத்தமாகிறேன். பட்டணத்தில் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் படிக்கும் என் மகள் லோரு என்னிடம் வந்து "அம்மா எங்களைப்படிப்பித்த சிஸ்ரர் இன்று தொடக்கம் மன்னருக்கு மாற்றலாகிப் போகிருர். ஐம்பது ரூபா தாருங்கோ அவருக்கு நான் ஒரு அன்பளிப்புச் செய்ய வேண்டும்"

★ ★ ★

பாடசாலை சென்ற போது வழமையாக மணியடிக்க கால அட்டவணையின் படி வேலைகள் ஒன்றன் பின் ஒன்ருக... பாடசாலை முடியும் மணி அடிக்கப் பட்டதும் ஸ்ராவ் றூமில் "போட்டு வாறம் ரீச்சர், டாட்டா, குட்பை" முதலிய சொற்களோடு விடை பெற்றனர். என் உடன் ஆசிரியைகள் அதன் பின்னர் ஆசிரியைகளின் சங்கத் தலைவி வந்தார். "ரீச்சர் பிரியாவிடைக்கு அழைக்கும்போது வந்திருங்கோ தப்பாமல்" என்று கூறி விடைபெறுகிருர். பிரியாவிடை வைபவங்களில் நடைபெறுபவை என்னவென்று எனக்குத் தெரிந்திருந்தது, ஓர் அன்பளிப்பு நன்றி, நவிலல். ஆனுல் பிரியாவிடைக்கு வந்திருக்கும் ஆசிரியைகளில் அநேகமானவர்கள் அடிக்கடி கடிகாரங்களைப் பார்த்துக்கொள்வர்.

அவர்கள் எலோரும் சென்ற பின்னர் சற்றுப் பின்னுல் செல்லுகின்றேன் தயக்கத்துடன். "ரீச்சர் உங்களுக்காக ஏழு வகுப்பு மாணவிகள் காத்துக் கொண்டு நிற்கிருேம்" இது என் வகுப்புகளில், ஒரு மாணவியான நெலோமியின் அழைப்பின் குரல். வியப்பின் மத்தியில் செல்லுகிறேன் அங்கே. பிள்ளைகள் எல்லோரும் என்னைச் சூழ்ந்து கொண்டனர். தாய்க் கோழியைச் சூழ்ந்து நிற்கும் குஞ்சுகள் போல.

அவர்களுடைய வெளிப்படுதல்கள் ஒன்றன் பின் ஒன்ருக ஆரம்பமாகின. நெமிலோமி என்கிட்ட வந்து என் கைகளைத் தன் முகத்தில் ஒற்றிக் கொண்டாள். ரீச்சர் நீங்கள் முதன் முதலா வகுப்பிற்கு வருவதற்கு முன்னதாக றபர் பாம்பை இலாச்சியில் வைத்தது நான்தான்! அவளின் நாடியைத் தூக்கி நிமித்திய போது என் கைகள் நனைந்திருந்தன அவள் கண்ணீரால். அடுத்து சிந்து, என் காலைக் கட்டிக்கொண்டாள். "ரீச்சர் ஏப்பிரல் முட்டாள் தினத்தில் நான்தான் உங்கள் பிளாஸ்க்கில், பிளாஸ்ரிக் மட்டத் தேளைப் போட்டு வைச்சது" அவள் எழுந்தபோது இரண்டு கண்களிலும் இருந்து கண்ணீர் பெருகியது. அடுத்துச் சோபா என் தோழில் சாய்ந்து கொண்டாள். "ஒரு நாள் நாங்கள் உங்களுக்கு வைத்த பட்டப் பெயரைச் சுவரில் எழுதியிருந்தேன். நீங்கள் நதியாக் கொண்டை போடுவீர்கள் ரீச்சர், அதுதான் நதியா என்று பட்டம் வைத்தோம். ஆனுல் அந்தப் பட்டம் உங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்க வேண்டும் என்ருள் தொடர்ந்து. "எப்படி"? இது என் கேள்வி. 'அன்று நீங்கள் ஆங்கில இலக்கண வகுப்பில் எழுதிய வசனங்களில் ஒன்று 'ஆசிரியை வகுப்பிற்கு வருவதற்கு முன்னதாக அவருடைய பட்டப்பெயரை யாரோ ஏற்கனவே எழுதியிருந்தனர்' என இருந்தது." என்ருள். உண்மையில் நான் முதல்நாள் ஆயத்தம் செய்து எழுதிவைத்திருந்த வாக்கியங்களையே எழுதினேன். அதுவும் இலக்கண நூல் ஒன்றில் இருந்த வாக்கியமாகும். அடுத்து பத்மா கேட்டாள். "ஏன் ரீச்சர் இவையெல்லாம் யார் செய்தது என்று ஒரு போதும் கேட்டதில்லை நீங்கள். வழமையாக ரீச்சர் நாங்கள் ஏதாவது குறும்பு செய்தால் அதிபரிடம் கொம்ளயின் பண்ணுவினம். யார் செய்தது என்று அறிய முடியாத அதிபர் எங்கள் எல்லோரையும் [illegible]'. அவளின் குரல் துக்கத்தினுல் கரகரத்தது. எல்லோரும் கண்ணீர் சிந்தினர். நானும் கூட... என் மேசையில் அன்பளிப்புகள் சேர்ந்தன. எல்லாம் முடிந்து பிள்ளைகள் புடை சூழ பஸ்தரிப்பு நிலையம் சென்றேன். பஸ் வரும்வரை காத்திருந்து கண்ணீரோடு பிரிவு. பஸ் வண்டியில் ஏறிய பின்னரும் மறையும் வரை கைகாட்டுதல்கள், பஸ் வண்டியில் பிரயாணம் செய்யும் போது என் கைக்குட்டையை எடுத்துக் கண்ணீரைத் துடைத்தேன். இரண்டு நிகழ்ச்சிகள் என் கண்முன்னே தோன்றின. மூன்று வருடங்கள் என்னோடு கற்பித்த ஆசிரியைகள், பாடசாலை விட்டதும் நின்று பத்துப் பதினைந்து நிமிடங்களாவது அளவளவாமல், 'இரயில் பயணங்களின் பிரிவுகள் போலச்' சென்றனர். பிள்ளைகளோடு அளவளாவிய பின்னர் எல்லோரும் போவதற்கு எழுந்த போது நெலோமி சொன்னது எனது ஞாபகத்திற்கு வந்தது. "ரீச்சர் இனிமேல் உங்களைக் காணமாட்டம் தானே இன்னும் கொஞ்ச நேரம் நில்லுங்கோ கதைப்பம்" இது என் உள்ளத்தை உருக்குவதாக இருந்தது.

வீட்டிற்குச் சென்ற போது அன்பளிப்புகளைத் திறந்து பார்த்தேன். சொக்கிலேற் தொடக்கம் ஏனைய பொருட்கள்.... அதில் ஒன்று பிளாஸ்ரிக் மட்டத்தேளாக இருந்தது. பின்வரும் குறிப்புடன். "உங்கள் அன்பை என்றும் மறவாத சிந்துவின் அன்பளிப்பு. இதை நான் எழுதும்போது கண்ணீர் சிந்துகிறேன்" இதற்கேதான் என் 'சென்ரிமென்ரல் வலியு'

என் மகள் லோருவை அவதானிக்கிறேன். அவள் முகம் குப்பறப்படுத்திருந்தாள். தலையைப் புரட்டிப்பார்த்தேன். கண்களில் இருந்து பொலபொலவெனக் கண்ணீர். காரணம் தங்களைப் படிப்பித்த சிஸ்ரர் மன்னருக்கு மாற்றலாகிப் போனதுதானும். "அவ நல்லவடிவு நல்லாய்ப் படிப்பிப்பா எங்கள் எல்லோரிலும் நல்ல அன்பு, எடிபிடி என்று......" இவ்வாறு அடுக்கிக்கொண்டு போனுள். அவள் அன்று சாப்பிடவில்லை, நானும் கூட.

அப்போது என் கணவர் உள்ளே நுழைந்தார். எங்கள் இருவரின் நிலையை அறிந்து, "என்ன பிரிவுத்துயரமோ." என்று சர்வசாதாரணமாகக் கேட்டு விட்டுப் போகிருர் உள்ளே. அவர் காரியலயத்தில் பைல்கள் முதலிய காகிதாதிகளோடு பழக்கப்பட்டவர். அவற்றைத் தூக்கியெறியலாம், கிழிக்கலாம், குப்பையில் போடலாம், எரிக்கலாம். ஆனுல் பாடசாலைகளின் உயிருள்ள ஜீவன்களின் உள்ளங்கள் உருகுவதை அவரால் உணர முடியவில்லை.

(யாவும் கற்பனை)

## என் வீட்டைப் பழுது பார்

பிரான்ஸிஸ்! பிரான்ஸிஸ்!
சென்று என் வீட்டைப் பார்
உடைந்து தகர்ந்த நிலையைப் பார்
வெடிப்புக்களை இணைக்கப் பார்
துவாரங்களை அடைக்கப் பார்
சுவர்களை திரும்பக் கட்டப் பார்
போ என் வீட்டைப் பழுது பார்

உனக்கு அப்பணம் தேவையில்லை
உன் பிதாவிடம் திருப்பிக் கொடுத்து விடு
சகல செலவும் என் கணக்கில்
கவலை எதுவும் உனக்கு இல்லை

கற்கள் அனைத்தையும் இரந்து பெறு
வேலைகள் எல்லாம் தேடிப் பெறு
இரக்கத்தின் செயல்கள் அக்கற்கள்
என் வீட்டின் நிலைகள் உன் வேலை
கொடுப்பதில் நிலைப்பது சந்தோஷம்

எதிர்ப்படும் கற்களை நீ உபயோகி
எதற்கும் கவலை உனக்கு வேண்டாம்
பெரிதோ சிறிதோ வளைவோ உடைவோ
உரு அற்றதோ உள்ளதோ கவலை விடு

தருமத்தை ஏற்றுக் கொள், விற்பனையை விலக்கு விடு
திறமையோ மடமையோ என் வழி நீ அறிவாய்
நல்ல மனமும், உள்ள மகிழ்வும் உன் ஆயுதங்கள்
பாரிய ஜன்னல்களை பார்த்திருக்கும் என் வீடு
வானம் அதன் மூலம் வடிவான காட்சி தரும்

வண்ண நிறங்கள் வடிவான ராகங்கள்
உண்மைக் கோலங்கள் உளம் மகிழும் கீதங்கள்
காவியம் அதன் கம்பளம் பரம்பரை அதன் பீதாம்பரம்
உவமைகள் அதன் உடு புடவை
உத்தம தனத்தின் உயர் ஏணிகள்

மக்கள் எழுப்பும் குரலொலிகள் மகிமைக் கடவுளின்
மாட்சிமைகள்
மனுக்குலம் விடுக்கும் சிரிப்பொலிகள் எல்லாம் என் வீட்டின்
சிறப்பியல்கள்
எடுத்துக் காட்டுவாய் நீ பிரான்ஸிஸ்! எழில் உறச் செய்வாய்
என் பிரான்ஸின்!

அருட்செல்வி. பெனடிக்ரா. தி. சி.

## எமது வேண்டுகோள்

இவ்வளவு சிக்கனமாக இத்தனை அம்சங்களுடன் "பாதுகாவலன்" வருகின்றமையால் அதனை வாங்கி வாசிக்கும்படி ஊக்குவிக்குமாறு மறைப்பணியாளர்கள், பக்திச்சபை அங்கத்தவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேம்.

(ஆ-ர்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுபடுவோம் உயர்வடைவோம்

பனி உறைந்த வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ளும் இளைஞர் உலகமே! தூங்கி விடாதே விழித்தெழு! உறங்கி விட்ட உண்மைகளை எடுத்து ஈரக்க இழந்த வாழ்க்கை சூழ் நிலைகளை சீரமைக்க தமது எதிர் கால சிந்தனைத்துயரில் அலை மோதிக்கொண்டிருக்கும் இளைஞர் தலைமுறையை விடிவின் பாதைவழி திருப்ப உன் மனச் சாட்சியை வளர்த்து உன் ஆத்மீக வாழ்க்கையை முன்னேற்ற ஏன் இன்னும் தாமதிக்கின்றாய்? அவசர உலகின் அலங் கோலங்களில் சிக்குண்டு மனக் கட்டுப் பாடுகளற்று போலி வாழ்க்கை வாழும் இக்கால இளம் சந்ததியினரே, நாளைய உலகின் பெருமைக்குரிய போற்றுதலுக்குரிய ஒழுக்க வாளர்களாகவும், சமுதாயத்தின் நலன் விரும்பிகளாகவும், மதப்பற்றுள்ள மகான்களாகவும், வாழவேண்டிய நீங்கள் போலி வாழ்வின் தடைச்சுவர்களைத் தகர்த்தெறிந்து அனைவரும் ஒன்றே குலம் என ஒருமித்து ஆக்கத்திற்குரிய அனைத்திலும் ஒன்றுபட்டு முழுமையடைந்த மனிதர்களாக ஒத்துழைக்க வேண்டும்.

மானிடவாழ்வு இன்பமாகத் திகழவேண்டுமாயின் எம்மில் விஞ்சி நிற்கும் நற்பண்புகளே எம இளமையைப் பறைசாற்றும். இந்த நீதியில் அறிவுள்ள, ஆற்றலுள்ள, பண்புள்ள, உயலாரில நலனுள்ள, துடிதுடிப்புள்ள இளைஞர் சமூகமாக அனைவரும் ஒன்றுபடவேண்டும். அன்பின் வழிநின்று ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு பல்துறைகளிலும் வளர்ச்சியடைய வேண்டும்.

இளைஞர் சமுதாயம் பல வழிகளிலும் பிரச்சனைகளை எதிர் நோக்க வேண்டிய இன்றைய காலகட்டத்தில் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ஒற்றுமைநீங்கின் அனைவர்க்கும் தாழ்வு" என்ற முதுமொழிக்கேற்ப நம்மிடையே உள்ள வகைகெட்ட ஏற்றத்தாழ்வுகள், கருத்து வேறுபாடுகள் சண்டைசச்சரவுகள் அனைத்தையும் முற்றாக விட்டொழித்து 'தனிமரம் தோப்பாகாது' என்பதற்கிணங்க கூட்டு வாழ்க்கையே சமுதாயத்தை முன்னேற்றும் என அறிந்து மற்றவர்களை அலட்சியப்படுத்தி ஒதுக்கிவிடாது, சமுதாய உணர்வுகளுடன் செயற்பட்டு உலகெங்கும் மனித உரிமைகள் நிலைநாட்டப்படும் இன்றைய யுகத்துடன் இணைந்து, நாமும் நம்மிடையேயுள்ள நெறி கெட்டவாழ்க்கை முறையை மாற்றியமைத்து யாம் அனைவரும் ஆக்கத்துக்குரிய வழிகளில் "ஒன்றுபடுவோம் உயர்வடைவோம்" என்ற சரிய நோக்கோடு செயற்படுவோமாக!

மாதகலூர் மா. ஜெறி

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
6-10-1989




அன்பு இளம் உள்ளங்களுக்கு

"யூதாஸ் நமதாண்டவரை மரணத்துக்குக் கையளித்தது பண ஆசையால்; பரிசேயர் பொறாமையால்; பிலாத்து கோழைத்தனத்தினால்; ஆனால் இறிஸ்துநாதரோ சிநேகத்தினாலேயே தம்மை நமக்குக் கையளித்தார்"

— என்கிறார் போசுவே

ஆம். கல்வாரி மலையின் காட்சியைப் பாருங்கள்: அதன் ஒவ்வொரு அம்சத்திலும ஆழமான அன்பினையே காண்கின்றோம். அன்பேஅதன் அடிட்படை அன்பே அதன் கொடுமுடி; அன்பே அவரது சிரசில் முள் முடியைச் சூட்டியது; அன்பே அவரைச் சிலுவையில் அறைய வைத்தது.

அன்பில்லாமையால் இன்று எமது சமுதாயம் சிதைவுற்று வருகின்றது. பண ஆசையினால், பழிவாங்கும் உணர்வினால், பொறாமையினால், பேராசையினால் மனிதன் மனிதனை எதிரியாக எதிர்கொள்கின்றான்; மனிதன் மனிதனை அவமானப் படுத்துகின்றான்; அழிவிற்கு உட்படுத்துகின்றான், சித்திரவதைப் படுத்துகின்றான்; சின்னாபின்னமாக்குகின்றான் எனவே, மனித சமுதாயம் அழிவுறுத்தலிலிருந்து விடுதலை எய்த. மனித மாண்பு பேணிப் பாதுகாக்கப்பட, மனித மேம்பாடு மதிக்கப் பட ஆவன செய்வோம்.

அழிவை அல்ல ஆக்கத்தையே
இழிவை அல்ல ஊக்கத்தையே
இன்றே நாங்கள்
நன்றாய் அளிப்போம்

நல்வாழ்த்துக்களுடன்,

அன்பு நெஞ்சன் வி. பி.

# கற்பனைகள்

இளைஞனே!...

என் உள்ளத்தைத் தொட்டுச் செல்லும் உன் வாழ்வின் கற்பனைகள் நான் நினைக்கின்ற பொழுது என் மனம் பதை பதைக்கின்றது.

இளைஞனே!...

நான் கற்பனை செய்தேன் நீர் ஒரு அன்பு உள்ளம் கொண்ட ஒரு தியாகியாக வருவாய் என்று ஆனால் நீயோ தியாகம் என்றால் என்ன என்று அறியாத ஜீவனாக இவ்வுலகத்தில் வாழ்வதை இட்டு என் உள்ளம் குமுறுகின்றது.

இளைஞனே!...

நான் கற்பனை கொண்டேன் நீர் ஒரு அறிவாளியாக வருவாய் என்று ஆனால் நீ இன்றோ அறிவற்ற மனிதனாகத் திரிவதை இட்டு என் மனம் வேதனை அடைகின்றது.

இளைஞனே!...

நான் கற்பனை கட்டினேன் சீதனம் என்ற பேயை அழித்து ஒழித்து பெண்ணினத்தின் விடிவுக்காக உழைக்கும் ஆசானாக வருவாய் என்று ஆனல் நீயோ சீதனப் பேய் பிடித்தவனாக பெண்ணினத்தின் வாழ்வைக் கெடுக்கும் பித்தனாக மாறுவதை இட்டு மன வருத்தம் அடைகின்றேன்.

இளைஞனே!...

நான் கற்பனை கொண்டேன், நீ நாட்டைக்காக்கச் செல்லும் வீரமங்கை என்று எண்ணினேன் ஆனால் இன்றோ நீ மனிதனையே மதிக்காத தீவிரவாதியாக இருப்பதை இட்டு மனச்சஞ்சலம் அடைகின்றேன்.

இளைஞனே!...

நான் கற்பனை செய்தேன் எல்லோரையும் ஒரே இனம் என்ற எண்ணத்துடன் வாழ வைப்பாய் என்று ஆனால். நீயோ இன்று இனம், மதம் பார்த்து வேறுபடுத்துவதை இட்டு கவலைப்படுகின்றேன்.

ராஜா

# ஒரு வரம் தருவாயோ?

தந்தை தாய் தனைமதிக்க
கற்றறிந்தோர் சொல் மதிக்க
பெரியோரைக் கனம் பண்ண
எமக்கொரு வரம் ஈவாய் இறைவா!

இறைவனின் மாண்புதனை
மனிதரில் கண்டுணர்ந்து
மனிதரை மதித்துவாழ
வரம் தாரும் இறைவா!

எஸ். அசிஸ் குமார்
புனித மாட்டீனர் குருமடம்
யாழ்ப்பாணம்.




வாசகர் சிலரின் கடிதங்களைப் பார்த்தோம். சில கட்டுரைகளும் பிரசுரிக்கப்பட்டன. கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. திரும்பவும், திரும்பவும் அதே கருத்துக் கொண்ட அதே கட்டுரைகளை அல்ல. புதிய கோணத்தில் புதிய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

குடும்பம் ஒரு கதம்பம் பகுதி வாசகர் மத்தியில் இவ்வளவு ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் படிப்பவர்கள் எல்லோரும் குறிப்பு சொல்லுவார்கள் என நாம் எதிர் பார்க்கவே இல்லை.

இலங்கையில் உள்ள "குடும்ப சேவை நிறுவனம்" [The family Service Institute] மணமாகின்ற மணமாகப் போகின்ற, நிட்சயம் செய்யப்பட்ட இளைஞர் இளம் பெண்களுக்கான ஆயத்த பயிற்சி வகுப்பை சமய, இன வேறுபாடின்றி போயா தினங்களில் நடத்தி வருகிறது.

அக்குவைனஸ் கல்லூரி, கொழும்பு 8 (Aquinas College, Colombo 8) என்ற முகவரியில் நடைபெறுகின்ற இந்த பயிற்சி வகுப்புக்களில் அருட்திரு பேவின் பர்னாந்து (Fr. Mervyn Fernando) கொடுத்த உரைகளின் தொகுப்பு "உங்கள் கனவை நனவாக்குங்கள்" (Make your dreams come true) என்ற ஆங்கில நூலுருவில் வந்துள்ளது.

குடும்பம் ஒரு கதம்பம் பகுதியில் அந்த ஆங்கில உரைகளின் தமிழாக்கத்தை பகுதி பகுதியாக அடுத்த வாரம் முதல் தருகிறோம்.

இதன் மொழியாக்கத்தை பிரபல எழுத்தாளர் எஸ் எம். ஜே அவர்கள் செய்கின்றார். வாசித்து பயனடையுங்கள்.

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

# குடும்ப வாழ்வில் குழந்தைச் செல்வம்

குழந்தை ஆராய்ச்சியில் நிபுணத்துவம் பெற்ற "தியோஜினஸ்" அறிஞர் கூறுகிறார் குழந்தைகள் பிறக்கும் போது நல்லவர்களாகவே பிறக்கிறார்கள். அவர்களை சமுதாயமும், கெட்ட பெற்றோருமே தீய வழியில் இட்டுச்செல்கிறார்கள் ஆகவே பெற்றோராகிய நாம் எமது குழந்தைச் செல்வங்களின் நல்வாழ்வில் மிகுந்த கண்காணிப்பு மிகுந்தவர்களாய் யேசுவின் பிள்ளைகள் மட்டில் பிரம்பைக் கையாளாதவன் என்னை வெறுக்கிறான் என்பதற்கிணங்க வாழப் பழகவேண்டும்.

இன்றைய எலக்ரோனிக் யுகத்தில் சிலர் தம் வாழ்வையே எலக்ரோனிக்காக மாற்றி தாம உண்டு தமக்கு வேண்டியவை தேட நேரம் உண்டு என ஆவலாதிப்பட்டு பொன், பொருள் தேடுவதில் அவதியுறுகிறோம். இதற்காக எமக்கு இறைவனால் அளிக்கப்படும் பாரிய பொறுப்பைக் கூட மறந்து குழந்தைகள், அவற்றின் பராமரிப்புக்கள் எல்லாம் தேவையில்லாத ஒன்றாகக் கருதி எம்மில் எத்தனைபேர் கருச்சிதைவு என அடிக்கடி மேற்கொள்கிறோம். அதுவும் மேலை நாடுகளை நோக்கிப் பறந்த எம்மவர் இதை ஒரு குடும்ப வாழ்வின் அன்றாடக் கடமைகளுள் ஒன்றாகக் காணுகிறார்கள். உண்மையிலேயே சிந்திக்க வேண்டியவையே. எம் கத்தோலிக்க திருச்சபையானது கருத்தடையை ஓரளவு அங்கீகரித்தாலும் கருச் சிதைவை என்றுமே அங்கீகரிக்காது. ஏனெனில் கருச்சிதைவு என நாம் கூறுவதை விட சிசு கொலை என நாம கூறுவதே சாலப் பொருந்தும்.

எனவே எம் பெருமான் இயேசு மோயீசன் மூலம் எமக்களித்த பத்துக் கட்டளைகளில் கொலை செய்யாதிருப்பாயாக என அறிவித்திருக்கிறாரே! அவ்வாறாயின் நாம் செய்யும் கருச்சிதைவுகள் எவ்வகையைச் சாரும் என நீங்களே சிந்தியுங்கள். பரிசுத்த வேதாகமத்தில் குழந்தைச் செல்வம் பற்றி யேசு கூறும் போது "கர்ப்பத்தின் கனி கர்த்தரால் கொடுக்கப்பட்ட கொடை" என்கிறார் கொடையைச் சீரிய முறையில் நெறிப்படுத்துவது தங்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

திருமதி: கரோலின் ஜீவரட்ணம்
பத்தமேனி, அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்வாக்கு அறிவோம்

## சிறிய இறைவாக்கினர்-35

**சக்கரியாஸ்-3.**

சக்கரியாஸ் ஆகமத்தில் அதி. 1—8 அதிவரை அடங்கிய பகுதி முதலாம் சக்கரியாஸ் என்றும் அதி. 9—14 அதி அடங்கிய பகுதியை இரண்டாம் சக்கரியாஸ் என்றும் அழைப்பர். முதலாம் சக்கரியாஸைப்பற்றி ஏற்கனவே பார்த்தோம். இனி இரண்டாம் சக்கரியாஸ் பற்றிப் பார்ப்போம்

சிறிய இறைவாக்கினர், தொகுப்பில் பெயர் தெரியாத இறைவாக்கினர் தொகுதியும் உண்டு. இத் தொகுதியைப் பிரித்து ஒரு தனி நூலாகவும் சிலர் கருதினர். ஆனல் சிறிய இறைவாக்கினர் நூல்களின் எண்ணிக்கையை யூதர்களின் பரிசுத்த எண்ணுகிய பன்னிரண்டாகக் கணக்கிட விரும்பினர் எனவே பெயர் தெரியாத இறைவாக்குத் தொகுதியில் முதல் இரண்டு தொகுதிகளாகவும் முதலாம் சக்கரியாஸ் நூலோடு சேர்த்து ஒரே நூலாக அமைத்தனர். இவ்வாறு சேர்க்கப்பட்ட பகுதிதான் சக்கரியாஸ் 9 ம்—14-ம் அதிகாரங்களாகும். இதுவே இரண்டாம சக்கரியாஸ் என்று அழைக்கப்படுகின்றது

முதலாவது சக்கரியா நூலுக்கும் 2-ம் சக்கரியா நூலுக்கும் இடையே பல வேறுபாடுகள் உண்டு. வரலாற்று நோக்கில் ஆராயும்போது முதலாம் சக்கரியா நூலில் வரலாற்றுக் குறிப்புகள் தெளிவாக உள்ளன. ஆலயம் மீண்டும் கட்டுதல், ஆளுநர் செருபாபேல், பெரிய குரு யோசுவா ஆகியவை பற்றிக் குறிப்பிடப்படுகிறது 2-ம் சக்கரியாஸ் நூலில் வரலாற்றுக் குறிப்புகள் இவை

சமய நோக்கில் ஆராயும்போது முதலாம் சக்கரியா நூலில் யெருசலேம், தாவீது அரசு புத்துயிர் பெறுதல், மெசியா பற்றிய கோட்பாடு முதலிய கருத்துகள் முக்கியம் பெற்றுள்ளன. 2-ம் சக்கரியா நூலில் மேற்கூறப்பட்ட கருத்துகள் சிறப்புப் பெறவில்லை. இதில் காணப்படும் மெசியா பற்றிய கோட்பாடு கி. மு. 520-ல் திவ்விய கருத்து அன்று. இப்பகுதியில் இறுதிக்கால இறையாட்சி பற்றிய பலவகைக் கனவுகளைக் காணலாம்.

இந்நூலில் பெரும் பகுதி பாடல் வடிவில் உள்ளது. நடை தெளிவாக உள்ளது. காட்சிகள் குழப்பமில்லாதவை. பெரும்பாலும் 2—ம் சக்கரியாஸ் நூல் எரேமியாஸ், எசேக்கியேல், 2-ம் இசையாஸ், 3-ம் இசையாஸ், மலக்கியாஸ், யோவேல் ஆகியோரின் வாக்குகளைத்தழுவி எழுதப்பட்டதாகத் தெரிகிறது.

கி. சா. பங்கிராஸ்

அறிந்துகொள்ளுங்கள் 91

## மோயீசனின் இறுதிக்காலம்

இஸ்ராயேல் மக்களின் தொகை கணக்கெடுக்கப்படுகிறது (எண் 25 : 4—51). இங்கு எண்ணி எழுதப்பட்ட பெயர்களில் முதல் கணக்கெடுப்பில் எழுதப்பட்டயாரும் இல்லை. காலேபையும் யோசுவாவையும் தவிர (எண் 26 : 64—65) இக்கணக்கெடுப்பு கானான் நாட்டைத்தாக்குவதற்கு வேண்டிய இருபது வயதுக்கு மேற்பட்ட போருக்குச் செல்ல வேண்டிய ஆண்கள் தொகையை அறியவே.

இந்நிலையில் தம் வாழ்வின் இறுதி நாட்கள் நெருங்கி வருவதை உணருகிறார் மோயீசன். இறைவன் மோயீசனை அபரீம் என்ற மலைக்கு இட்டுச் சென்று கானான் நாட்டைக்காட்டுகிறார். சின் பாலைவனத்தில் மக்கள் முன்னிலையில் இறைவனின் புனிதத் தன்மையை சந்தேகித்து பாறையை இரண்டு முறை அடித்தார். மோயீசனும், ஆரோனும் அதனால் இருவரும் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு செலல அருகதையற்றவர்களானார்கள். (எண் 27 : 12—15).

தனக்கு நெருங்கி வரும் முடிவை உணர்ந்த மோயீசன் தனக்குப்பின் மக்களை வழிநடத்த ஒரு தலைவரை நியமிக்க வேண்டும் என்று இறைவனை கேட்க, இறைவன் நூனின் புதல்வனுகிய யோசுவாவை நியமிக்கும் படி கூறுகிறார். மோயீசன் யோசுவாவின் மேல் தன்கைகளை விரித்து தன்பதவியையும் அதிகாரத்தையும் கொடுத்து அவரை மக்கள் தலைவராக நியமிக்கிறார் (எண் 27 : 22-23).

இதன்பின் மோயீசன், நாள் தோறும் செய்யும்பலி, ஒய்வு நாள் திருநாட்கள், திருவிழாப்பலி, நேர்ச்சைகள் பற்றிய வழிபாட்டுச் சட்டங்களை கொடுக்கிறார். இஸ்ராயேல் மக்கள் மதியானியரை தோற்கடித்து அவர்களைக் கொள்ளையிட்டு பொருட்களை கொண்டு வந்தார்கள். கொள்ளைப் பொருட்களை இறைவனின் ஆலோசனைப்படி பங்கிட்டுக் கொடுத்தார். மோயீசன் இங்கு கொள்ளைப் பொருட்களைப் பங்கிடும் சட்டம் கொடுக்கப்படுகிறது.

யோர்தானுக்கு கிழக்கிலுள்ள நாட்டை காத், ரூபன் கோத்திரங்களுக்கும் மனுசேயின் பாதிக்கோத்திரத்திற்கும் பகிர்ந்தளிக்கிறார். இதன்பின் கானான் நாட்டைக் கைப்பற்றுவதுபற்றியும், கைப்பற்றியபின் நாட்டைப் பகிர்ந்துகொள்வது பற்றியும் திட்டம் செய்கிறார். இந்நிலையில் எண்ணுகமம் முடிவடைகிறது.

இ. ம. ஜெயசீலன்

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

வாசக அன்பர்களே!

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் உறவு கலவாமை வேண்டும்." என்றார் நம் முன்னேர்! ஆம். அநேகமாக நம்மில் பலர் சமுதாயத்தில் நடிக்கின்றோம். பெரியவர்களாக, அறிஞர்களாக, தலைவர்களாக, காட்டிக் கொள்ளுகின்றோம்! பெரும்பாலும், ''தர்மவாளர்' என்று காட்டிக்கொள்பவர்கள்- வெறும் வேடதாரிகளாகவே இருப்பார்கள்! சுய விளம்பரத்திற்காக தங்களுக்கு தாங்களே போட்டுக்கொள்ளும் "மேக்கப்" இது.

ஞானத்தின் நிறைநூல் இவர்களைப் பார்த்து ஒரு அசட்டு சிரிப்புடன் இப்படிக் கூறுகிறது.

"தன் உதடுகளைப் புரட்டுகின்ற மதிகெட்ட செல்வனைக் காட்டிலும்- தன் நேர்மையில் நிலைபெறுகின்ற வறியவன் அதிக நல்லவனும்." (19/1) -ல்

பார்த்தீர்களா? மௌனத்தில் மொழிபேசும் 'மனச்சாட்சி'யை தட்டித்திறக்கிறார் திருநூல் ஆசிரியர். சரியாக ஒத்துவராவிடினும் ஓரளவு பொருந்தக்கூடிய ஒரு முதுமொழியையும் தருகிறேன். ஒப்பிட்டுப் பாருங்களேன்.

"உலகிற்கு ஒன்றும் கொடாதவனே பெரிய சோம்பேறி"

பொருத்தம்- பொருத்தமா?

"சிந்தித்து செயல்படு" என்றார் முன்னேர் இன்று நாம் ஆற அமர சிந்திக்கும் நிலையில் இல்லை. எதிலும் வேகம், எங்கும் வேகம், எதையும் உடனே செய்து முடித்துவிட வேண்டுமென்ற பரபரப்பு! இப்படிப்பட்டவர்களுக்கு இன்னும் ஒரு முதுமொழியையும் உதிர்க்கின்றார் முன்னேர்.

"பதறிய காரியம்- சிதறியே தீரும்."

"இவர்களின் வேகத்திற்கு ஆப்பு வைத்தாற்போல உரைக்கிறது திருநூல் 19/2 இல்" இப்படி!

"ஞான அறிவில்லாத இடத்தில் நன்மை இல்லை வேகமாய் நடக்கிறவனுடைய கால்கள் இடறும்."

நீங்களும் இதைப் படிக்கும் போது நிதானமாக, ஆற அமர படிப்பீர்களா?

### வாரம் ஒரு சிந்தனை

"மனிதன் அவசரக்காரன்! அதனால்தான் காய்களைப் பறித்து பழுக்க வைக்கின்றான்.'

### ஏழ்மை எனது காதலி

என் இனிய இயேசுவே! எனக்கும் என்னருமைக் காதலி ஏழ்மைக்கும் உமது அளவற்ற இரக்கத்தைக் காட்டியருளும்.

புனித பிரான்சிஸ் அசிசியார்

# காவலன் கண்மணிகள்

ஒளி: 3 கூர்: 35

**எம் விழிகளின் ஒளி யேசு**
**எம் வாழ்வின் வழி யேசு**

### எப்படியும் வாழலாமா?

எப்படியும் வாழலாம் என்று, இன்று கண்மணிகள் சிலர் நினைக்கக்கூடும். அப்படி ஒருநாளும் நாம் நினைக்கக் கூடாது. எப்படியும் வாழ நினைக்கும் ஒருவர் மனம் மாற்றம் பெற்று எப்படி வாழ வேண்டும் என்று புனித சாள்ஸிடம் கேட்டால் அவர் கூறுவார்:

(i) கடவுளது சேவையில் முன்னேற விரும்புகிறவன் தன் வாழ்வின் ஒவ்வொரு நாளையும் புதிய ஆர்வத்துடன் தொடங்க வேண்டும்.

(ii) கூடுமான வரை எப்போதும் கடவுளது சமூகத்தில் வாழ வேண்டும்.

(iii) தான் செய்யும் அனைத்திலும் கடவுளது மகிமையைத் தவிர வேறு எந்த நோக்கமும் கொண்டிருத்தலாகாது.

புனித சாள்ஸின் புத்திமதிகள் உங்களை எதிர்காலத்தில் புனிதர்களாக மாற்றி எப்படியும் வாழலாம் என்ற நிலையை விடுத்து அவர் வார்த்தைப்படி வாழும் வரத்தை குழந்தை யேசுவிடம் கேட்டு நிற்கும்,

அன்பின் அன்பு விழி

### அங்கத்துவம்

219. சி- மேரி கலையரசி 6 றே. க. த. க. பாடசாலை, உயிலங்குளம்
220. வி. அன்ரனற் அனுபா 9 கன்னியர் மடம் ம. வி. இளவாலை.
221. வே. லூட்ஸ் சுஜாதா 6 றே. க. பாடசாலை, குளமங்கால்.
222. P. மெரின் டிசாந்தா 10 புனித மரியாள் பெ. பா. ஊர்காவற்றுறை.
223. யோ. மேரி டிசாந்தா 7 றே. க. த. க. பாடசாலை, உயிலங்குளம்
224. செ. மேரி யோசவின் 6 றே. க. த. க. பாடசாலை, உயிலங்குளம்
225. கு. மேரி பற்றீசியா 6 றே. க. த. க. பாடசாலை உயிலங்குளம்.

### கௌரவ அங்கத்துவம்

A/19 ம. நிர்மலராஜ் அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்.
A/20 S. S. கருணைதாஸ் அ. ம. தி. குருமடம், கொழும்புத்துறை.
A/21 பி. சே. மெ. மரியகொறற்றி ஆண்டு 12 முருங்கன் ம. வி. மன்னார்.

### புனிதர்களைத் தந்த பொன்னாடுகள்

புனித அந்தோனியார்...... எகிப்து.
புனித போஸ்கோ அருளப்பர்...... இத்தாலி.
புனித ஜஸ்டின் ... சமேரியா.
புனித அத்தநாசியார்...... அலெக்சாண்டிரியா
புனித தொமினிக் (சாமிநாதர்)...... ஸ்பெயின்.
புனித நிருனோ...... ஜேர்மனி.
புனித சிலுவை அருளப்பர்...... ஸ்பெயின்.
ஆதாரம்: புனிதர்களின் பாதையில்: வெ. யூஜின் A/10

### இவர்களை மறப்பேனே?

கடவுள்: காலையும் மாலையும்
கைகூப்பி வணங்கும்
கருணைக் கடலான
கடவுளை மறப்பேனே?

அம்மா: அன்பு மடியில்வைத்து
ஆராட்டிப் பாட்டிசைத்து
இன்பப் பாலூட்டிய
அன்னையை நான் மறப்பேனே?

அப்பா: பள்ளிக்கனுப்பி வைத்த
பரீட்சையில் சித்திபெற்று
கல்வியில் உயர வைத்த
தந்தையை நான் மறப்பேனே?

ஆசிரியர்: பாடம் தொடங்கி வைத்து
பள்ளியில் படிக்கவைத்து
பண்புகள் சொல்லித்தந்த
பண்புக் குருவை மறப்பேனே?

ம. கிறிஸ்ரி மோகன்ராஜ் அங். எண் 28.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகர் கருத்து



நான் வாலிபன். என் ஆசா பாசங்களுக்கு தாராளமாய் இடந்தந்து பொல்லாத வழிகளில் புகுந்து கெட்டவன். என்துஷ்ட நண்பர்களை வெருட்டி இஷ்ட நண்பனுக வந்து உயரிய நோக்கங்களை, உண்டுபண்ணிய உண்மை நண்பன் சத்திய பாதுகாவலனே!

நான் தமிழன். தமிழனுயினும், குங்குமம் சுமந்த கழுதைபோல, தமிழின் சுவையறியாதிருந்த எனக்குத் தண்டமிழின் தனிச் சுவையூட்டி, அதன் பஞ்சாமிர்த பானங்களைப் பருகச் செய்த பண்டித நண்பன் சத்திய பாதுகாவலனே!

இத்தகைய நலன்கள் நனிமிகக் கொண்டு நந்தமிழ் நாட்டில் நம் மறைவட்டங்களில் உலவி வரும் சுகுண சீலனும் பாதுகாவலனது சகவாசத்தை உடனே இன்றே வரவழைத்து, நேசித்துவாசித்து, நலம் பெற்றுய்வார்களாக!

ஜி. ஈ. மிராண்டா
வங்காலை

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 15

### ஆமோஸ் ஆகமம்

விடைகளை அனுப்பவேண்டிய இறுதி நாள் 29-10-1989

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 டை | 3 | 4 ர் | ■ |
| 5 | | ம் | | 6 |
| 7 | | 8 | | வா |
| க் | ■ | 9 | ண் | |
| 10 | ம் | 11 | | |

இடமிருந்து வலம்

1. இறைவாக்கினர் ஆமோஸ் இந்தக் குலத்தைச் சேர்ந்தவர்.
5. ஆமோஸ் அநீதிக் கெதிராக மிகக் கடுமையாக இறைவாக்குரைத்தார். மிகக்கடுமையாக என்பதன் ஒத்த சொல்லொன்று இங்கு குழம்பிக் கிடக்கின்றது.
7. பொன்னை நெருப்பில் இது செய்ய இடுவார்கள். இச் சொல்லின் நடுஉயிர் மெய்யெழுத்து, மெய்யெழுத்தாகி மாறிக்கிடக்கிறது.
8. ''இரைச்சல், கூச்சல், எக்காள முழக்கம்'' இவற்றுக்கிடையில் இவன் மடிவான் என்பதனுலோ என்னவோ குழம்பிக் கிடக்கிருன்.
9. சமாரியப் பெண்களை ஆமோஸ் இப்படிப்பட்ட பசுக்களே என்று அழைக்கிருர். மூன்றெழுத்துச் சொல்குழம்பிக் கிடக்கிறது.
10. ஒன்று என்பதன் ஒத்த சொல்லொன்று குழம்பிக் கிடக்கிறது.
11. இவன் ஒரு அரசன். இவனது எலும்புகள் முதலாய் சுட்டுச் சாம்பலாக்கப்பட்டன.

மேலிருந்து கீழ்:

1. ஏதோம் இது கொஞ்சம் கூட இல்லாமல் தன் சகோதரனையே வாளால் துன்புறுத்தினுன். இக்காலத்திலும் இது இல்லை என்பதனுலா குழம்பிக் கிடக்கிறது,
2. ''ஆதலால் காசாவின் ... ... ... மதில்மேல் தீயனுப்புவோம்'' மூன்றெழுத்துச் சொல் குழம்பிக் கிடக்கிறது.
3. மனிதனது ஒரு மூன்றெழுத்து [illegible]கம் குழம்பிக்கிடக்கிறது.
4. பாவமிழைத்த சமாரியப் பெண்கள் இங்கே கொண்டு போய்த் தள்ளப்படுவார்கள்? நாலெழுத்துச் சொல் குழம்பிக் கிடக்கிறது.
5. அநீதி செய்பவர்கள் இங்கு சென்று ஒளிந்தாலுங் கூட ஆண்டவரது கரம் அவர்களைப் பிடித்து வரும். இச்சொல் 'தா' என்ற இரண்டாம் எழுத்து 'வா' என்ருகிக் குழம்பிக்கிடக்கின்றது,

## வேதாகம குறுக்கெழுத்துப் போட்டி இல. 14-ன் முடிவுகள்

### யூதித் ஆகமம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ■ | ஆ | க் | கி | யோ | ர் |
| மே | யு | மே | ரா | ரி | மா |
| தி | த | ■ | ■ | டை | ப |
| ய | ங் | ■ | ■ | கா | த் |
| ர் | க | ஓ | ர | பா | த் |
| ■ | ளை | பா | வி | வா | ணி |

இம் முறை 57 பேர் சரியான விடை எழுதியுள்ளனர். அனைவருக்கும் எமது பாராட்டுகள்.

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி

செல்வி. மேரி இமல்டா
லேஞ்சூஸ்
மணற்காடு,
குடத்தனை.

## வங்காலைப்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கவும் தெரிவித்தார். உயர் படிப்பிற்காக செல்கின்ற குருவானவருக்கு பங்குமக்கள் சார்பில் அன்பளிப்பு வழங்கப்பட்டது. இதற்கு நன்றி தெரிவித்து உரையாற்றிய அருள் தந்தை ஜெயபாலன் குருஸ் தான் பங்கிலே இருந்தகாலத்தில் தனது பணியை நல்முறையில் செய்வதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைத்தார்கள். தொடர்ந்தும் இனிவருகின்ற பங்குக் குருவானவருக்கும் நல்ல ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென கேட்டுக்கொண்டார். இன்னும் பல கலைநிகழ்ச்சிகளுடன் பிரிவுபசாரவைபவம் முடிவுற்றது.

தகவல்:- அ. மகேந்திரன்

## 1ம் ஆண்டு இதயக் கண்ணீர் அஞ்சலி



அருளானந்தம் அன்ரனி
ஆண்டவன் படைப்பு
25-08-1946
அநியாய அழிப்பு
10-10-1988

உன்முகத்து ஒளியினிலே
நாங்கள் முகம் மலர்ந்து வீற்றிருந்த
கலகலப்பு வாழ்க்கையெல்லாம்
கனவாகிப் போனதையா!
இன்ருே சோகத்தில் முகம் கூம்பி
விழியெல்லாம் நீர்தேங்கி
விம்மல் விழியாகி விட்டதையா
உள்ளக் கபடின்றி உழைத்த உத்தமனுய்
ஊருக்கு பணிசெய்து உயர்ந்த
தலைமகனுய்
எம்மை யெலாம் பிரியமனமின்றிப்
பிரிந்தாயோ!

உன் நிறைவே எமது ஆவி பிரியும்வரை வாட்டி வதைத்த வண்ணமே இருக்குமையா! இறைவா இப்படியா எம்மை வாட்ட விரும்பினுய்

''உயர் இலட்சியங்கள் உண்மைகள் நீதிகள் நியாயங்கள் என்றும் அழிவதில்லை''

இவரின் ஆன்மா இறைவனில் சாந்தி பெற இறைவனை நிதமும் இறைஞ்சும்,

உங்கள் ஈடுசெய்ய முடியாத
பிரிவுத்துயரால் வாடும்
ஜோசேப், செபமாலை
குடும்பத்தார்.

அந்தோனியார்
கோயில் வீதி,
தாளையடி.

A/22 _ கரவட்டி.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



வரப்பிரகாசம் அருளானந்தம்
(செல்லத்துரை)

தோற்றம்: 06-04-1933
மறைவு: 06-09-1989

''சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும்மறவாதீர்கள்!''

அன்பின் இறைவா!

உமது சித்தத்தின்படி உம்மிடம் அழைத்துக் கொண்ட உமது அடியான் வரப்பிரகாசம் அருளானந்தம் என்னும் அடியானின் ஆன்மாவிற்கு நித்திய வாழ்வை அளித்தருளும்.

இவரின் ஆன்மசாந்திக்காக 06-10-1989 வெள்ளிக்கிழமை காலை 6-00 மணிக்கு மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி மக்கள், பேரப்பிள்ளை,
மருமக்கள்.

3-ம் வட்டாரம்,
மண்டைதீவு. A/200.

## 31-வது நாள் நினைவு



சொ. நாகலிங்கம் மரியதாஸ்
மண்ணில்: 1932-06-18
உயிர்வாழ்வில்: 1989-08-11

''ஏற்ற காலத்தில் உனக்கு செவிமடுத்தேன்
மீட்பின் நாளில் உனக்கு துணை நின்றேன்''

இவரின் ஆன்ம சாந்திக்காக புனித யுவானியார் ஆலயத்தில் 11-10-1989 காலை 6-00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

A/216

**படைத்தவன்
உங்களை வழிப்படுத்த
நாளும், பொழுதும்
வேண்டுங்கள்.**

## 1ம் வருட நினைவு



…ருணி இராசரத்தினம் A/225

அவனியில்: 26-11-1932
ஆண்டவனில் 8-9-1988

அம்மா நீர் எமைவிட்டு விண்ணுலகம் சேர்ந்துவிட, நாம் ஓராண்டு கவலையுடன் வாழ்ந்திட்டோம். கனிவாக உம் மக்களுக்காக வேண்டுவீர். இவவின் ஆன்ம இளைப்பாற்காக நாரந்தனை புனித சம்பேதுருவானவர் தேவாலயத்தில் 7ம் திகதி சனிக்கிழமை காலை 6-15 மணிக்கு இரங்கற்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
மக்கள், சகோதரர்
உறவினர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி. இராயப்பு
அந்தோனிக்கம்

மலர்வு: 3-07-1914
உதிர்வு: 15-10--1988

''சீவியத்திலும் நேசித்தோம்.
மரணத்திலும் மறவோம்''



இறைவா! இன்னல்நிறைந்த இவ்வுலகில் நின்று உம்மால் பேரின்ப மகிமைக்கு அழைத்துக் கொள்ளப்பட்ட திருமதி இராயப்பு அந்தோனிக்கம் அவர்களது ஆன்மாவுக்கு நித்திய வாழ்வையும் முடிவில்லாத ஒளியினையும் கொடுத்தருளும்.

இவரது ஆன்ம சாந்திக்காக 13-10-1989ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 4-30 மணிக்கு கரவை புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்குபற்றி இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்ருடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இவரது பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பெருமகன்,
பேரப்பிள்ளைகள், சகோதரர், உறவினர், நண்பர்கள்.

A/217.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# கிறிஸ்துவே எங்கள் சமாதானம்

## நற்கருணை மாநாட்டின் விருது வாக்கு

''கிறிஸ்து எங்கள் சமாதானம்'' என்பதே அக்டோபர் 4 - 8 திகதிகளில் கொரியாவில் நடைபெறவிருக்கும் நற்கருணை மகாநாட்டின் விருது வாக்காகும். பகையினுல் பிளவுபட்டிருக்கும் கொரியாவுக்கு இந்த வார்த்தைகள் விசேட அர்த்தமுள்ளவை என கொரிய ஆயர்கள் தமது மடலில் குறிப்பிட்டுள்ளனர்.

திருத்தந்தை இம்மகாநாட்டில் கலந்துகொள்வார்.

புனித பிரான்ஸிஸ் அசிசியாருடைய திருநாளாகிய அக்டோபர் 4 ஆம் திகதி உலக சமாதான தினமாக அனுசரிக்கப்படும். அன்று சமாதானப் பிரச்சினைகள் பற்றிய உரைகளும், சமாதானத்திற்காக செபங்களும் நடைபெறும். இறுதியில் சமாதான விழா கலைநிகழ்ச்சிகளுடன் முடிவடையும் சமாதானம்மகாநாட்டின் முக்கிய கருத்தாக இருந்தாலும் ஏனைய நான்கு நாட்களுக்கும் உபதலைப்புகள் தரப்பட்டுள்ளன.

மகாநாட்டு ஆயத்தக் குழுவின் தலைவரான கருதினல் கிம் சூ ஹ்வான், அதன் ஆன்மீக, கலாச்சார, சமூக அம்சங்களை தமது குழுவுடன் திட்டமிட்டுவருகிருர்.

கருதினல் கிம் உலகின் 109 ஆயர் பேரவைகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். இதுவரை 60 பேரவைகள் தமது பிரதிநிதிகளைக் குறித்துள்ளன.

## தொடர்பு சாதனங்கள் பற்றி தாய்லாந்து ஆயர்எச்சரிக்கை

''குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் வெகுசனத் தொடர்புச்சாதனங்களை ஆலோசனையுடனும், முறையாகவும் பயன்படுத்த வேண்டும்'' என உடென் தானி ஆயர் ஜோர்ஜ் பிம்பிசான் பாங்கொக் மறைமாவட்டக் குருக்களின் மாதாந்த ஞானெடுக்கமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

''சமூக நலனுக்காகப் பயன்படும் தொடர்புச்சாதனங்களின் முக்கியத்துவத்தை திருச்சபை உணர்ந்துள்ளது. ஆனல் அவை தீய வழியில் பயன்படுத்தப்பட்டால் அவற்ருல் விளையும் அழிவும் மிகப்பெரிது. தொலைக்காட்சியில் வன்செயல்கள், பாலியல் நிகழ்ச்சிகளைக் காட்டும்போது அதைப்பார்க்கும் சிறுவர்கள் அதுவே வழக்கமான முறை எனக் கருதி ஏற்றுக்கொண்டு விடுகின்றனர். ஆகவே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிப்போர் பொறுப்புணர்ச்சியுடன் அதைச்செய்யவேண்டும்.'' என அவர் மேலும் கூறினுர்.

## புதிய ஏற்பாட்டின் மற்ருெரு பதிப்பு

பம்பாய்ப் பேராயர் கருதினல் சைமன் பிமென்ரா ஜூலை 20-ம் திகதி புதிய ஏற்பாட்டின் புதிய பதிப்பொன்றை வெளியிட்டுவைத்தார்.

கருதினுலுக்கு நூலின் பிரதியொன்றை அளித்த புனித சின்னப்பர்சபை மாகாண அதிபரான பிதா வெச்சூர் இந்நூலானது தமது சபையின் 75 ஆண்டு நிறைவின் பரிசாகும் எனக் கூறினுர். நூலின் பிரதிகளை சிலருக்கு அளித்த கருதினல் சபையின் ஸ்தாபகரான பிதா சுல்பஞெய்ஸ் இலட்சக்கணக்கான வேதாகமங்களை அச்சிட்டு விநியோகித்தார் எனக் குறிப்பிட்டார்.

## புனித யாகப்பர் பற்றிய கதைக்குப் புதிய முடிவு

பிலிப்பைனிலுள்ள டப்பிற்ரூன் புனித யாகப்பர் ஆலயத்தில் மேடையேற்றப்பட்டுவந்த ஒரு நாடகத்தின் இறுதியில் கிறிஸ்தவ வீரர்கள் இஸ்லாமியரை தோற்கடித்து விரட்டுவதாக முடிவு அமைந்திருந்தது. ஆனல் இம்முறை அம்முடிவு மாற்றப்பட்டு கிறிஸ்தவரும் முஸ்லீம்களும் நண்பராக ஒருவரை ஒருவர் அரவணைப்பது போல் புதிய முடிவு அமைந்துள்ளது.

மின்டானுேவில் பெருந்தொகையான முஸ்லீம்கள் வாழ்கின்றனர். அவர்களது உணர்வுகளைப் புண்படுத்தாத விதத்தில் இம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இங்கு ஸ்பானிய மறைபோதகர் 1631 மறைபோதகத்தை ஆரம்பித்தனர். முஸ்லீம்கள் கப்பற்கூட்டமொன்று டப்பிற்ரூன் துறைமுகத்தை அணுகிவந்தபோது குதிரை வீரர் ஒருவர் அவர்களைத் தடுத்ததாக பரம்பரைக்கதைகள் கூறுகின்றன.

## வேதாகம...

நாட்டை வறுமை, ஊழல் ஆகியவற்றிலிருந்து மீட்கத் துணைபுரியுமென்றும் பேராயர் மேலும் கூறினுர்.

அமெரிக்கக் குருவாகிய பிதா தொம் மார்ட்டி தீவிர புரொட்டஸ்தாந்த குழுக்கள் சமயரீதியான தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றன என்றும் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையை ஆதரிப்பதுடன் மூன்ரும் மண்டல நாடுகளில் நீதி, சுதந்திரத்துக்கான இயக்கங்கள் செயற்படாது தடுத்து சர்வாதிகாரத்தை ஆதரிக்கின்றன என்றும் கூறினுர்.

## பரிசு பெற்ற பிதா கிளாஸன்

கலிபோர்ணியாவிலுள்ள வறுமை ஒழிப்பு நிறுவனத்தினுல் நடத்தப்பட்ட கட்டுரை போட்டியில் இறையியல் கலாநிதி பிதா பீலிக்ஸ் கிளாஸன் விசேட பரிசைப் பெற்ருர். அவரது கட்டுரை ''இந்தியாவில் வறுமை ஒழிப்பு'' பற்றியது. சுவிற்சர்லாந்து நாட்டினரான பிதா கிளாஸன் ஞானதீப வித்தியா பீடத்தின் முன்னுள் பேராசிரியராவர். இவர் இந்தியாவில் 38 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிருர். தற்போது 72 வயதான இவர் புனித சூசையப்பர் கொலனியில் சமூகப்பணிகள் செய்து வருகிருர்.

# புதியதோர் யுகத்தின் பேறுகால வேதனை

—அருட்திரு. அதிரியான் யோசப் அ.ம.தி.—

### II பரிகாரம் தேடல்

1. முதற்பாகத்தில் கூறப்பட்ட பிரச்சனைகளுக்கெல்லாம் தீர்வுகாண,சிதறியநோக்குடன் அவற்றை ஒவ்வொன்ருக ஆராய்வதைவிட, ஒருமுகப்படுத்திய பரந்த கண்ணேட்டத்துடன் முதல் நோக்குவதே சாலச் சிறந்தது.

இறைவனின் பிரதிநிதியாக உலகத்தை ஆளவேண்டிய மனிதன், இவ்வுலகத்திற்கும், தான் படைத்த பொருட்களுக்கும் அடிமையாகிருன். தன்னைப் படைத்த கடவுளையும் மறந்து, அவரது சாயலான மனிதனின் மகத்துவத்தையும் மதியாமல் சடப் பொருளையே (Inanimate Matter) தன் தெய்வமெனப் போற்றுகின்ருன். இதுவே இன்றைய அடிப்படையான பிரச்சனையெனலாம். இதை உலகத்துவம் (Secularism) உலகமையக் கோட்பாடு, சமயமின்மை, மதச்சார்பற்றமை எனப் பலவிதமாகத் தமிழாக்குகின்றனர்.

இந்நோயை இறைவன் மாத்திரமே குணப்படுத்த வல்லவர். ஏனெனில் விசுவாசம் மனு இயல்பு கடந்தது. மனுக்குலம் தவறிப்போனதெல்லாம் இறைவன் தலையீடுசெய்துமீட்டதைத் திருமறை நூலில் காண்கின்ரேம். திருச்சபைக்கு இக்கட்டான காலங்களில்அசிசிபிரான்சிஸ், சாமிநாதர், 5ம் பத்திஞதர்,மேரி வியன்னிபோன்ற புனிதர்கள் செபதபத்தாலேயே வெற்றிகண்டனர். இந்த ஞான யுக்தியையே கையாளுமாறு மரியன்னையும் அவள் அளித்த பல காட்சிகளில் வற்புறுத்துகின்ருள்.

2, இரண்டாவதாக,இறையாற்றலில் முழு நம்பிக்கை வைத்து, மீட்பின் நற்செய்தியை அயராது எடுத்துரைப்போம். அது உயிருள்ள வார்த்தையாக எங்கள் வாழ்க்கையிலும் சாட்சியம் பகரவேண்டும். ''அதிகாரங்கொண்ட போதனையைவிட சாட்சியம் தரும் சாதனையையே இன்றைய வாலிப உலகம் ஏற்கும்,'' என பாப்பிறை 6-ம் சின்னப்பர் சொன்னுர்.

3. முன்னைய குருக்களும்,துறவிகளும் பெற்றோரும் மறைக் கல்வி கற்பிப்பதே தங்கள் தலையாய கடமையெனக் கருதினர். ஆனல் இன்று, ஆனல்ட்லன் (Arnold Lunn) கூறியது போல, ''கிறிஸ்தவம் விசுவாசத்திற்குக் கொடுக்கவேண்டிய முதன்மையை (Priority) அதன் கிளை விளைவான (By Product) சமூக நலனுக்குக் கொடுக்கின்றது. ஆனல் மதமின்றி அறமும்மறமாகிவிடும்'' சொந்த ஆன்மீக வாழ்வை அமெரிக்கவாதம் (Americanism) எனப் பாப்பிறை 13-ம் சிங்கராயர்கண்டித்தார்.''செயலீடுபாட்டுத் தப்பறை'' Heresy of Action)எனக் கர்தினுல் மேர்மில்லட் (Mermillod) அதற்குப் பட்டந்தரித்தார். முன்னை ஒருபோதும் இல்லாதவாறு சமூக வேலைகளும், சமூக நலத் திட்டங்களும், சமூக விழிப்புணர்வைத் தட்டியெழுப்பும் கருத்தரங்குகளும் இருந்தும், ஏன் இன்று முன்னையிலும் விட மனிதன் மனிதனை வெறுக்கின்ருன். கோரச் சித்திரவதை செய்து கொன்று குவிக்கின்ருன், மூலவளங்களையும் நிர்மூலமாக்குகின்ருன்? மதச்சார்பற்ற பிறரன்பு சுயஅன்பாகிவிடும். மேலும் மறை அறிவு இல்லாவிடின் திருவழிபாடும் அர்த்தமற்ற வெற்றுச்சடங்காகிவிடும். எனவே மறைக் கல்வியிலே தாம் முதற்கவனம் செலுத்த வேண்டும்.இன்றையகுடும்பமும் பாடசாலையும் போதிய மறைக் கல்வி புகட்டாக் குறையைத் தீர்க் மறைக் கல்வி நிலையங்களெல்லாம் நடமாடும் அடித்தளவேதியர் குழுக்களாய்குழுக்களால் (Bare-foot Catechists) காட்சியளிக்கவேண்டும். இவ்வாறு செய்தல் பன்முகப்படுத்தல் (Decentralization) என்னும் இன்றைய செய்முறைத் தத்துவத்துடனும் பொருந்தும்.

(தொடரும்)

## அன்னை திரேசா குணமடைந்து வருகிருர்

இதயநோய் காரணமாக கல்கத்தா மருத்துவ மனையொன்றில் சிகிச்சை பெற்றுவரும் அன்னை திரேசாவின் உடல் நிலையில் முன்னேற்றம் காணப்படுவதாக வைத்தியர்கள் கூறுகின்றனர்.

இதயத்துக்குச் செல்லும் இரத்த ஓட்டம் தடைப்பட்டதால் ஏற்பட்ட நெஞ்சுவலி காரணமாக செப்டெம்பர் 4 ம் திகதி இவர் வுட்லன்ட்ஸ் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். அன்னை திரேசாவுக்கு முன்புவைத்தியம் செய்த உரோமாபுரியைச் சேர்ந்த டாக்டர் ஜோர்ஜ் லம்பாடி ஆகியோரின் ஆலோசனையுடன் இந்திய வைத்தியர்கள் அவருக்குச் சிகிச்சையளித்து வருகின்றனர்.

திருத்தந்தை 2 ம் அருள் சின்னப்பர் அன்னை திரேசாவுக்காக தாம்செபிப்பதாக செய்தி அனுப்பியதுடன் தமது விசேட ஆசியையும் அளித்துள்ளார்.

பிரதமர் ராஜிவ் காந்தி தமது மனைவியுடன் ஒரு விசேட விமானத்தில் கல்கத்தா சென்று அன்னை திரேசாவைத் தரிசித்தார். தமக்கு மலர்ச்செண்டு ஒன்றை அளித்து வாழ்த்துக் கூறிய பிரதமரை அன்னை திரேசா அன்புடன் அரவணைத்து ''முன்பு நான் உம்மை ஒரு சிறுபையனுகக் கண்டிருக்கிறேன். இப்போது வளர்ந்துவிட்டீர்'', என்று கூறியதுடன் சோனியா காந்தியிடம் அவர்களது பிள்ளைகளைப்பற்றி விசாரித்தார்.

ஜனதிபதி வெங்கட்ராமனும் வேறு பல இந்தியப் பிரமுகர்களும் செய்திகளை அனுப்பியுள்ளனர்.

அமெரிக்க ஜனதிபதி ஜோர்ஜ் புஷ், முன்னுள் ஜனதிபதி றேனல்ட்றேகன் ஆகியோரும் அன்னையின் உடல் நிலைபற்றி விசாரித்துள்ளனர்.

அன்னை திரேசாவின் அன்புக் கன்னியர் சபையின் மடங்கள் அனைத்திலும் அவருடைய உடல் நலத்துக்காக விசேட செபங்கள் நடத்தப்படுகின்றன. நோயாளிகளும், தொழுநோயாளரும் பிற பொதுமக்களும் இவற்றில் கலந்துகொள்கின்றனர்.

நோய்வாய்ப்பட்ட நிலையிலும் அன்னை திரேசா தமது சபையின் நிறுவனத் திருநாளன்று தமது கன்னியருக்கு வாழ்த்துச் செய்தியனுப்பத் தவறவில்லை.

1946-ல் நிறுவப்பட்ட இச்சபையில் தற்போது 2683 கன்னியர்கள் உளர். இச்சபை 89 நாடுகளில் பணிபுரிந்து வருகிறது. இந்தியாவில் 161 மடங்களும் பிறநாடுகளில் 247 மடங்களும் உள்ளன.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல: QB/ 1001/ 68/81

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னேடிருக்கிரேம் என்கிருர் ஆண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org